தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 62 மலர் 10

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2019

துணர்: 62 விபவ — தை மலர்: 10

ஜனவரி — பிப்ரவரி — 1989

உள்ளுறை பக்கம்

1. ஒரு சீரடி சதுக்கம் ... 430
டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி

2. 'உயிர்மெய்' என்பது எத்தொகை மொழி ... 439
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

3. ஏபிரகாமும் சிறுத்தொண்டரும் ... 449
(சென்ற இதழ் தொடர்ச்சி)
நா ஆறுமுகம்

4 திருவள்ளுவர் கூறும் மருதம் ... 454
இரா. கணேசன் எம். ஏ., பி. எட்.,

5. குலமரபுச் சின்னம் ... 460
டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்,

6. பழந்தமிழிலக்கியத்தில் சட்டமும் நீதிமன்றமும் ... 468
காவேரி ஆவுடையப்பன், எம். ஏ., எம். பில்.,

7. தாய் நாற்பது ... 469
இராமசாமி கோனார்

8. சி. வை. தமோதரம்பிள்ளை வாழ்வும் வாக்கும் ... 473
டாக்டர் மா. இராசேந்திரன்

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
செயலாளர். தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு, செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி எல் பிஎச்.டி,
இயக்குநர். தமிழ்வளர்ச்சித்துறை. சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம்.லிட், பிஎச்டி
தமிழ் மொழித்துறைத் தலைவர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
தமிழ்த்துறைத் தலைவர்.
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
இயக்குநர் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட், பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம்,
தமிழ்த்துறைத் தலைவர் பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, B.A.
சென்னை.

,, முனைவர், ஈரோடு தமிழன்பன்,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர். தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர் த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா.இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி.

,, பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்.,
துணைப் பேராசிரியர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

'ஒரு சீரடி சதுக்கம்'

டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி
விரிவுரையாளர்
சுவடிப்புலம்
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தொல்காப்பியர் காலத்து யாப்பிலக்கண நெறிகள், அக் காலத்திற்குப் பின் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ளன என்பதை நன்கு அறியலாம். எழுத்தெண்ணிக் கொள்ளும் பா வகையும், தளை பற்றிய கொள்கைகளும் போன்ற இன்ன பிற இலக்கணக் கோட்பாடுகள் அம்மாற்றங்களுள் அடங்கும். யாப் பிலக்கணம் சொல்லும் முறையிலும் அசைக்குறுப்பாகும் எழுத்துக்கள் யாவை என்பதிலும் யாப்பிலக்கண நூல்கள் வேறுபட்டு நிற்கும் தன்மை யாப்பிலக்கணத்தில் காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்தியம்புகின்றன எனலாம்.

பாக்களது சீர்வரையறை

பாக்களுக்குரிய சீர்வரையறையை அனைத்து யாப்பிலக்கண நூல்களும் எடுத்தியம்புகின்றன. ஆசிரியம், வெண்பா, கலிப்பாவிற்கு நாற்சீரடியும், வஞ்சிப்பாவிற்கு இருசீரடியும் முச்சீரடியும் வரப்பெறும் என்பது பொதுவான யாப்பிலக்கண விதியாகும். முச்சீரடிதான் வஞ்சிப்பாவிற்குரிய அடிச்சிறுமை என்று பிற நூல்கள் கூறவும் யாப்பருங்கல விருத்தி இருசீரடியும் வஞ்சிக்குரிய அடிச்சீசிறுமையாகும் என்று கூறுகிறது.[1] இரு சீரடியான் வரும் வஞ்சியே சிறப்புடையது என்றும் அது கூறுகிறது. இருசீரடி' முச்சீரடி நாற்சீரடி எனும் மூவகையே பாக்களுக்குரிய சீரடிகள் என்பதும், அவற்றால் ஆகும் பாவகைகள் வஞ்சி ஆசிரியம் வெண்பா கலி என்பதும் பெறப்படும். எனவே ஓருசீரான் வரும் அடிவகை தமிழ்யாப்பு நெறியில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு சீரடி

ஒருசீர் தனித்து வருவது பாக்களின் ஒருறுப்பு நிலையிலேயே நிகழும். ஆசிரியம் வெண்பாவில் வரும் கூனும், கலிப்பாவில் வரும் தனிச்சொல்லும், இவ்வகையில் அடங்குவன. இவை

1) யாப்பருங்கலவிருத்தி, நூ 26 உரை.

பாக்களின் உள்ளடக்கத்தை வலியுறுத்துவதற்கும், நிகழ்ச்சி மாற்றங்களை எடுத்துக்காட்டுவதற்கும் பயன்படுவனவாகும். இவையன்றி வெண்பாவின் ஈற்றடியின் இறுதிச்சீர் அசையே சீராக அமைந்ததாகும்.

" ஓரசையே நின்றும் சீராம் பொதுவொரு நாலசையே "[1] என்று யாப்பருங்கலக்காரிகை கூறும். இவ்வாறன்றி ஒரு சீரே அடியாக நின்று ஒரு பாவகையாக உருவாக்கம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கணச்சூடாமணி

இலக்கணச்சூடாமணி[2] என்னும் யாப்பிலக்கண நூல் ஒரு சீரான்வரும் யாப்பு வகையைச் சுட்டுகின்றது. 17-ஆம் நூற்றாண்டளவினதாகக் கருதப்படும் இந்நூல் உறுப்பியல், பாவியல், பிரபந்தவியல், ஒழிபியல் என்னும் நான்கியல்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு பாவுக்குமுரிய அடிவகைகளைக் கூறுமிடத்து,

" ஒருசீ ரடிசதுக்கம் ஓரிருசீர் முச்சீர்
வருசீ ரடிவஞ்சி மற்ற - தொருநான்கு
சீரகவல் வெள்ளை சிறந்தகவி என்றறிஞர்
ஊரறியச் சொன்னார் உகந்து "[3]

என வகைப்படுத்திக் காட்டுகிறது. இந்நூற்செய்யுளுக்கு அமைந்த உரை,

" என்பது இவ்விலக்கணம் என்னுதலிற்றோவெனின் இப்பாக்களது சீர்வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

ஒருசீரடி சதுக்கமென்றும், இருசீரடி முச்சீரடி வஞ்சிப்பாவென்றும், நாற்சீரடி அகவலென்றும் (வெண்பாவென்றும்) கலிப்பாவென்றும் அப்பாவினது இலக்கணத்தோடு நடைபெறும் என்றவாறு.

---

1) யாப்பருங்கலக்காரிகை, b.

2) தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச் சுவடித்துறையில் சுவடி நிலையில் இருக்கும் இந்நூல் இக்கட்டுரையாளரின் பதிப்புப் பணியில் விரைவில் வெளிவரவிருக்கிறது.

3) இலக்கணச்சூடாமணி 15.

உதாரணம் வருமாறு :

‘ தவளமெய்
யவளே
பவளவா
யவளே ’

இது சீர் (ஈரசையான்) வந்த சதுக்கம்.

‘ அத்திமுகத்
துத்தமனை
நித்த நினை
சித்தமே ’

இது மூவசையான் வந்த சதுக்கம்.

‘ மருத நல்விளந்
தெரு வொடுபொரும்
குருசிலைநினைந்
தருளீபெறுதுமே ’

இது கனிச்சீரான் வந்த சதுக்கம் ”

என நூற் செய்யுளின் கருத்தைத் தெளிவுறுத்துகிறது. இவ்விலக்கணத்தாலும் இதன் உரையாலும் **சதுக்கம்** என்றொரு பாவகை யுண்டென்பதும், அது ஒரு சீரான் அமைந்த அடிகள் நான்கு கொண்டு வருவதென்பதும், அந்த ஒரு சீரடியும் ஈரசையானும் மூவசையானும் வரப்பெறுமென்பதும் பெறப்படுகின்றன. இப்புதுயாப்புவகை ஆய்தற்குரியதாகும்.

சதுக்கம்

சதுக்கம் என்பதற்கு ‘ நான்கு கூடியது , நாற்சந்தி, சந்து, மேடை, தலையில் கட்டும் உருமால் ’ என்ற பொருள்களைத் தருகின்றது தமிழ்ப் பேரகராதி.[1] தமிழ் இலக்கியங்களில் நாற்சந்தி என்ற பொருளிலேயே இச்சொல் ஆளப்பட்டுள்ளது.

‘ பூதம் புடைத்துணும் பூத **சதுக்கமும்** ’

என்பதற்கு ‘ நாற்சந்தி ’ என உரைகாண்பார் அடியார்க்கு நல்லார் .[2]

1) தமிழ்ப்பேரகராதி, தொகுதி 3
2) அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம், 1, 5, 34

' பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக '

என்பதற்கு ' நாற்றெருக் கூடுமிடம் ' என உரைகாணுகிறார் அரும்பதவுரைகாரர் .[3] மேலும்.

' கூகைச் சேவல் குரலோ டேறி
ஆரிருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்
அணங்குகொல் கிளறும் மயங்கிருள் நடுநாள் '[1]

என நற்றிணையிலும்,

' யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் '[2]

எனத் திருமுருகாற்றுப்படையிலும் இச்சொல் இப்பொருளில் பயின்று வந்துள்ளதைக் காணலாம். நச்சினார்க்கினியரும் சதுக்கம் என்பதற்கு நாற்சந்தி என்றே பொருள்காணுகிறார். எனவே ' ஒவ்வொன்றாக நான்கு சேர்ந்த ஒன்று ' என்ற பொருண்மையையுடையது சதுக்கம் என்ற சொல் என்பது நன்குபுலனாகும்.

வடசொல்

சதுக்கம் என்பது சதுஷ்கா (Catushka) என்னும் வட சொல்லின் திரிபு என்பர். இதற்கு,

"Consisting of 4 (நான்கு உறுப்புகளைக் கொண்ட ஒன்று); a set of 4, collection of four (நான்கு பொருள்களின் தொகுதி) a quadrangular courtyard (சதுர முற்றம்); a necklace of 4 strings (நான்கிழைச் சங்கிலி); a large four sided pond (சதுரக்குளம்)".

என்ற பொருள்களுண்டென்று சமஸ்கிருத - ஆங்கில அகராதி[3] கூறுகிறது இவ்விளக்கம் மேற்கருத்தைத் தெளிவுறுத்துவதாக அமையும். வடசொல்லின் திரிபாக இதனைக் கொண்டால் இதனால் பெயர் பெற்ற பாவகையும் அவ்வியாப்பினதாகவே

3) அரும்பதவுரை, மணிமேகலை 1, 55

1) நற்றிணை. 319, 4, 6

2) திருமுருகாற்றுப்படை, 224, 225.

3) Sir Monier Monier, williams, A SANSKRIT ENGLISH DICTIONARY, Motilal Banarsidass

கொள்ளல் வேண்டும். தமிழ்யாப்புநெறியில் இவ்வகைப் பாவகை இல்லையென்பது வெளிப்படை. வடமொழி யாப்பு வகையில் ‘சதுக்கம்’ என்ற பெயரில் இவ்வியாப்பு அமையப்பெறவில்லை. இலக்கணச் சூடாமணி ஆசிரியர் கூறுகின்ற ஒரு சீரையே அடியாகக் கொண்டு பாடப்படுகிற யாப்பு வகை வடமொழியில் உண்டென்பது மட்டும் நம்மால் அறிய முடிகின்றது.

வீரசோழியம் கூறும் யாப்பு

வடமொழியின் இலக்கணங்களைத் தமிழில் கூறவந்த வீரசோழியம் எழுத்தெண்ணிப் பாடப்பெறும் யாப்புவகைகளாக இருபத்தாறனை எடுத்து விளக்குகின்றது. உத்தம், அதியுத்தம், மத்திமம், நிலை, நன்னிலை, காயத்திரி, உண்டி, அனுட்டுப்பு, பகுதி, பந்தி, வனப்பு, சயதி, அதிசயதி, சக்குவரி, அதிசக்குவரி ஆடி, அதியாடி, திருதி, அதிருதி, கிருதி, பிரகிருதி, ஆகிருதி, விக்ருதி, சங்கிருதி, அபிகிருதி, உற்கிருதி எனும் இவை ஒற்றொழித்து உயிராவது உயிர் மெய்யாவது பாத(அடி) மொன்றற்கு ஓரெழுத்து முதலாக முறையே இருபத்தாறெழுத் தளவும், கொண்டு பாடப்பெறுவனவாகும்.[1] இவற்றுள் உத்தம், அதியுத்தம் மத்திமம், நிலை என்பவற்றிற்குக் காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகள் ஒரு சீரடியை நினைவூட்டுவனவாக அமைகின்றன.

கார் நேர் வார் யார்	உத்தம்	போதி யாதி பாத மோது	அதியுத்தம்.

வேரம்வேய் மாரன்சீர் சேருங்கால் நேர்வான்யான்	மத்திமம்
போதிநீழற் சோதிபாதம் காதலானின் றோதனன்றே	நிலை

1) வீரசோழியம், யாப்புப்படலம், 33

வீரசோழியத்துள் காட்டப்பெற்றுள்ள இவ்வெடுத்துக்காட்டு களைத் தமிழ் யாப்பு நெறிக்கேற்ப அசையலகிட்டுப் பார்க்கும் போது அவை முறையே, ஓரசையாலும் ஈரசையாலும் மூவசையாலும் அமைந்த ஓரடிகளால் ஆனவை என்பதை நன்கறியலாம். இவ்வகை யாப்பிற்குரிய இலக்கணத்தைப் பிறிதொரு யாப்பிலக்கண நூலும் தெளிவுறுத்துகின்றது.

விருத்தமணிமாலா

இவ்விலக்கண நூல் வடமொழி விருத்த யாப்பிலக்கணத்தை எடுத்துரைப்பதாகும். இதனுள், ஒருபாதத்திற்கு ஒரு எழுத்து (அக்ஷரம்) வீதம் உக்தா சந்தஸ் என்னும் பாவகை அமைவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இதில் இரண்டு வகைகளுண்டு; ஒரு பாதத்தில் குரு எழுத்து (அக்ஷரம்) கொண்டதாக ஒருவகையும், லகு எழுத்து (அக்ஷரம்) கொண்டதாக ஒருவகையும் அமைகின்றன. இவற்றுள் ' குரு ' வால் இயற்றப்படும் யாப்பிற்கு ' ஸ்ரீவிருத்தம் ' என்று பொருள்படும் என்றும் அந்நூல் கூறுகிறது.[1] ' உக்தா சந்தஸ்-ஏகாக்ஷரம், என்ற பாவகைக்கு அவர்தரும் எடுத்துக்காட்டு.

கௌ — ரீ
ஸ்ரீ — தா

என்பதாகும். இதனால் ஒரு பாதத்திற்கு (அடிக்கு) ஒரு சீர் வரும் யாப்புவகை வடமொழியில் உண்டென்பது உறுதியாகும். இவ்வகையாப்பைத் தமிழில் அறிவுறுத்தும் எதிர்நோக்கிலேயே இலக்கணச் சூடாமணியாசிரியர் தம் நூலில் எடுத்துரைத் துள்ளார் என்று கொள்ளலாம்.

கலிப்பாவின் உறுப்புகளுளொன்று ஒரு சீரடி

கலிப்பாவின் உறுப்புகளுள் அம்போதரங்கம் என்பதும் ஒன்று. அது சிற்றெண், இடையெண், அளவெண், பேரெண் என அமையும். இவை இருசீரோரடி, முச்சீரோடி, நாற் சீரோரடி என்ற அளவில் எட்டாகவும் நான்காகவும், இரண்டாகவுமாகிய அடிகளால் வரப்பெறும். ஆயினும் ஒரு சீரடியால் சிற்றெண் அமையப்பெறும் என இலக்கண நூல்கள் கூறவில்லை; இரு சீரடியையே சிற்றெண்ணுக்கு அளவுகோலாகக் கூறுகின்றன. இந்நிலையில் ஒரு சீரடியையும் சிற்றெண்ணுக்கு அளவுகோலாக மாறன் பாப்பாவினம் என்னும் நூல் கூறுகின்றது.

1) Ganapathi Sastri, Vrttamanimala, Trichy, 3, 1977, slogam, 12.

அது, "வண்ணக ஒத்தாழிசையினுள் இருசீரோரடிச் சின்னம் பதினாறு ஒரு சீரோரடியால் வருவனவும் உள"[2] எனக் கூறுகின்றது. மேலும் ஒரு சீரால் வந்த சிற்றெண்ணுக்கு,

"தறுகணான்
மத்தமடவன்"[3]

என்பதை எடுத்துக்காட்டாகத் தருகின்றது. பாவினுள் ஒரு சீரால் அடி நடைபெறும் என்பதற்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகும். இலக்கணச் சூடாமணியாசிரியரும்,

"நாற்சீர்முச் சீரிருசீர் நாடுமொரு சீர்முறையே
பேச்சுறுமம் போதரங்கப் பேர்"[3]

என அம்போதரங்கம் ஒரு சீரடியால் நடைபெறும் என்பதை எடுத்துரைக்கின்றார். கலிப்பாவினுள் ஒருறுப்பாகவிருந்த ஒரு சீரடியால் நடைபெறும் அமைப்பு தனித்ததொரு யாப்புவகையாக உருப்பெறும் நிலையை இவர்சுட்டுகிறார் எனலாம். இதனையே 'ஒருசீரடி சதுக்கம்' என்று யாப்பையும் அதன் அடிவகையையும் சுட்டியுள்ளார்.

ஒருசீரடி என்பது கருத்துச் செறிவை உள்ளடக்கியதாக அமையும். கவிதையின் உணர்ச்சியையும் பொருண்மையும் ஒரு சீரில் செறித்துக் காட்டும்பொழுது அத்தகு கவிதை சிறப்புடைய தாக அமையும். இதனால் அம்போதரங்கம் வினைமுற்றாய் அமைதல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றார் இலக்கணச் சூடாமணி ஆசிரியர்.[4]

யாப்பு வளர்ச்சி

பாவில் ஏற்படும் நெகிழ்வுகளே பாவின் வளர்ச்சிக்கு அடிப்படைகளாக அமைகின்றன. ஒரு பாவின் உறுப்பே பிற பாக்களின் உறுப்புகளாக இடம் பெறுவதும், ஒருபாவின் உறுப்பே பிற பாவினத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைவதும் யாப்பு வளர்ச்சியைச் சுட்டுவனவாகும். எனவே இலக்கணச் சூடாமணி ஆசிரியர் சுட்டும் இவ்வியாப்பு வகையும் அத்தகு

2) மாறன் பாப்பாவினம், திரு. கி. இராமானுஜையங்கார் (பதி), மதுரைத் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்ப் பிரசுரம், 56, மதுரைத் தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை 1932 இ 93 குறிப்புரை.

3) மேலது பரிபாடல் 2.

3) இலக்கணச்சூடாமணி 48

4) மேலது 49

வளர்ச்சி நிலையில் எழுந்த ஒன்று எனக்கருத இடமுண்டு. நிலவிய இலக்கணக்கூறுகளை வரையறுத்திக் காட்டுவதும், நிலவுகின்றவற்றை வெளிப்படுத்திக்காட்டுவதும், இவ்வாறு அமையவேண்டும் என விதித்துக் கூறுவதும் இலக்கண ஆசிரியரின் கடமைகளாகும். அவ்வகையில் இலக்கணச் சூடாமணி ஆசிரியர் கூறியது புது யாப்பு நெறியை விதித்துக் கூறுமுகத்தான் எழுந்ததாகும்.

புதுயாப்பு

இன்றைய யாப்பு வளர்ச்சியை நோக்கும்பொழுது சுருங்கிய வடிவில் உணர்வைச் செறித்துக் கூறும் நெறியைக் கவிஞர்கள் மேற்கொண்டுள்ளனர் என்பது புலனாகும். இத்தகைய நெறிக்கு மிகுதியான சீர்அமைப்புகள் பொருந்ததாதனவாகும். இன்றைய புதுக்கவிதைகயாளர்களுள் பெரும்பாலோர் ஒரு சீரடிகளால் அமைந்த கவிதைகளையே நிரம்பவும் இயற்றுகின்றனர் என்பது வெளிப்படை. இத்தகு புதுக்கவிதை யாப்பு நெறிக்கு, இலக்கணச் சூடாமணியாசிரியர் கூறிய ‘ சதுக்கம் ’ என்னும் யாப்பை இலக்கணமாகக் கூறக் கருதுதல், புதுக்கவிதையாளர்களின் இலக்கணமின்மை நெறிக்கு மாறாக அமைதல் கூடும். எனினும் எந்தவொரு யாப்பு வகையும் பொருண்மை அடிப்படையில் இலக்கணம் பெற்றாலும், இலக்கண அடிப்படையில் பொருண்மைபெற்றாலும் அவற்றை வரையறுத்துக்காட்டுவது இன்றியமையாததாகும். அவற்றை ஆய்ந்து காணுதல் தமிழ் அறிஞர்களின் கடனாகும்.

பதிப்பாசிரியர் குறிப்பு

பண்டைத்தமிழ் நூலார் நோக்க நோக்கப் பொருள் விரியும் சொற்களை அணிநயமும் தொடை நயமும்பட மும்முதற் பொருளையும் புலப்படுத்துவதையே செய்யுளாகக் கொண்டனர். எழுவகைச்செய்யுளுள் பாட்டு என்பதற்கு மட்டுமே விரிவான யாப்பியல்களைக் கூறிச்சென்றனர். மந்திரப்பொருள்வயின் ஆகும் முதுமொழி என்னும் செய்யுள் அடிவரையறையற்றது. அஃது சொற்சீரடி முதலாக வரும் என்பதும், நிறைமொழி மாந்தர் ஆணையாக அமையும் என்பதும் தொல்காப்பியச் செய்யுளியலான் அறியக்கிடக்கின்றது. இக்காலத்து எழுந்து நிகழும் புதுக்கவிதை என்பது அடி முதலியவரையறை

யில்லாதன எனப்படும் பிசி அங்கதம் உரை என்னும் செய்யுள் வகையில் அடங்கும். அவை பற்றிய இலக்கியங்கள்மிக் கிருந்த ஒரு கால எல்லையில் அவற்றை உட்கொண்டு அமைக்கப் பட்டதே வடமொழி யாப்பிலக்கணக் கோட்பாடுகள்.

இலக்கணச் சூடாமணியார் கூறும் ஒரு சீரடிச் சதுக்கம் என்பது வாய்மொழி என்னும் மந்திரவகையைச் சார்ந்தது. அவர் அடி என்றது பாதம் என்னும் வடசொல்லை கருதியதாகும். தமிழில் அடி என்பதற்கு அடுத்தது அல்லது அடுக்கி நிகழும் உறுப்பு என்பது பொருள். ஓரடிச் சதுக்கம் என்பதற்கு நேரிய பொருள் நாற்சீர் கொண்டதொரு அடியை நான்கு கூறாக்கிச் சதுரமாக அமைப்பது என்பதாகும். தொல்காப்பியத்திற்குப் பின் இடைக்காலத்து எழுந்த யாப்பிலக்கண நூல்கள் யாவும் வடமொழித் தாக்கத்திற்கு ஆட்பட்டவையேயாதலின் இலக்கணச் சூடாமணி போன்றவை கூறுவன புதியன போன்றதொரு மயக்கத்தைத் தோற்றுவிக்கின்றன.

* 'உயிர்மெய்' என்பது எத்தொகை மொழி ?

பேராசிரியர் ச. பாலசுந்தரம்
(தமிழ்ப் பல்கலைக்கழகம்)

உயிர்மெய் என்பதனை ஒற்றுமை நயத்தான் ஓரெழுத்தாகக் கொள்ளுமிடத்து அன்மொழித்தொகை என்றும் வேற்றுமை நயத்தான் இரண்டெழுத்தாகக் கொள்ளுமிடத்து உம்மைத் தொகை என்றும் தொல்காப்பிய உரையாசிரியன்மாரும் நன்னூல் முதலாய பின்னூல்களின் உரையாளரும் கூறியுள்ளனர். அது பற்றிச் சிறிதும் ஐயுறாமல் இந்நாள்வரை அவ்வாறே தமிழாசிரியன்மார் மாணாக்கர்க்குக் கற்பித்து வருகின்றனர். இற்றைய மொழியியல் ஆசிரியன்மார் அது என்ன தொகைமொழி என்பது பற்றிக் கவலையுறாமல் அவர்தம் கோட்பாட்டின்படி விளக்கிப்போகின்றனர்.

மேலையாரிய மொழிகளில் மெய், உயிர் என்னும் பாகுபாடு தவிர உயிர்மெய் என்னும் ஒரு பாகுபாடின்மையான் அதுபற்றிய சிந்தனை அவர்க்கில்லையாயிற்று. பாரத நாட்டில் உள்ள மொழிகளில் மட்டுமே இக்கூட்டெழுத்து முறை உண்மையான் அறிவியல் நோக்கில் அதன் உண்மை இயல்பினைத் தமிழ் மொழி ஆய்வாளர் தேர்ந்துரைக்கத் தூண்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'உயிர்மெய்' எழுத்தினைப் பற்றி ஆய்வதற்குமுன் தமிழ் மொழிக்கண் அமைந்துள்ள எழுத்துக்களைப் பற்றியும் அவற்றின் பாகுபாடு பற்றியும் காலத்தான் முற்பட்டதும் முழுமையானதுமான தொல்காப்பிய அடிப்படையில் நோக்குங்கால் பின்வரும் இயல்புகள் புலனாகின்றன.

சொற்களுக்கு மூலமாக உள்ள எழுத்து மூலாதாரத்தின் மேல் அமைந்துள்ள நாதததத்துவமானது சிதாகாசம் என்னும் தலையுச்சியில் தோன்றும் உணர்வினான் தூண்டப்பெற்றுக் கிளர்ந்து உயிர்வளியினது ஆற்றலான் ஓங்கி அபானன் என்னும் காற்றினான் இசைமயமாய் உந்தியில் கருக்கொண்டு சிந்தையில் நிகழும் கருத்துக்களைத் தனக்கு அகநிலையாகவும் பிறர்க்கு

---

* 2—3—89, ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறை இலக்கணக் கருத்தரங்கிற் படிக்கப் பெற்றது.

அவர்தம் செவிக்குப் புலனாகப் புறநிலையாகவும் உருப்பெற்று எழும் என்றும், அவற்றை முறையே அகத்தெழுவளியிசை, எழுந்து புறத்திசைக்கும் மெய்தெரிவளியிசை என்றும் தொல்காப்பியம் விளம்புகின்றது. (பிற. சூ. 20) அவற்றுள் புறத்தெழுவளியிசையின் எழுத்தாக்கங்களே மொழி எனப் பெறுகின்றது. அவ் எழுத்து, கருத்துணர்வினான் தூண்டப் பெற்ற மாந்தரின் முயற்சியான் அவ்வளியிசை உந்தியினின்றும் மேலெழுந்து தலைமிடறு நெஞ்சு என்னும் மூவிடங்களில் உணர் வழுத்தம் பெற்று மிடற்றுக்குழல் மிடற்றுக்கு மேலமைந்துள்ள மூக்குக் குழல் ஆகிய இவற்றின் இயக்கத்தான் ஓசையும் ஒலியும் பெற்று அண்ணம், அண்பல், நா, இதழ் ஆகிய வாயினது உறுப்புக்களான் வடிவமைந்து வெளிப்படும் என்பது தொல்காப்பியக் கோட்பாடு (பிறப்பியல் சூ. 1)

'எழுத்து' என்பதற்குரிய இலக்கணம் ஐந்து கூறுகளையுடையது. (1) ஊனமில்லா மாந்தரின் உந்தி முதலாக முந்து வளியான் வாயுறுப்புகளின் தொழிலாற் கண்டத்திலின்று வெளிப்பட்டுச் செவிப்புலனாகும் (2) அருவமாக நிகழ்ந்து ஒலி வடிவாய் வரிவடிவம் செய்து கொள்ளற்கு உரியதாகத் திகழும் (3) தனித்தோ தொடர்ந்தோ உருப்பெற்றுச் செவிப்புலனாக மாத்திரை என்னும் இசையளவினைக் கொண்டு அமையும் (4) சொல்லாகவோ சொல்லுறுப்பாகவோ நின்று சொல்லாயவழி இருதிணை ஐம் பாற்பொருளையும் அவற்றின் பண்பு செயல் முதலாயவற்றை உணரவும், உணர்த்தவும் கருவியாகத் திகழும் (5) தனித்து நிற்பினும் மொழியிடை உறுப்பாய் நிற்பினும் அதன் அடிப்படை இயல்புகள் திரிபுறாமல் இருக்கும் (வரிவடிவம் செய்து கொள்ளற்கு ஏலாத ஒலியும் இசையும் எழுத்தாகா) இவ்வைந்து கூறுகளும் தொல்காப்பிய நூன்மரபு-மொழி மரபு-பிறப்பியல், புணரியல் ஆகியவற்றுள் அமைந்துள்ள சூத்திரங்களான் தெளியப் பெற்றவையாகும். [விளக்கம் எனது எழுத்ததிகார உரையுள் காண்க]

எழுத்தின் வகையும் - விரியும்

மேற்கூறிய எழுத்துக்கள் உயிர், மெய், சார்பு என மூவகைப் படும். உயிர் 12, மெய் 18, சார்பு 3 என்பது அவற்றின் விரியாகும் (நூன்மரபு 1 - 2)

தொல்காப்பியம், மூன்றே சார்பெழுத்து எனக் கூறுகின்றது. பின்வந்த நூல்கள் கூட்டியும் குறைத்தும் கூறுகின்றன. தொல்காப்பியம் - சார்பெழுத்துக்களை தனி எழுத்தாகவே (ஒலியனாகவே) கூறுகின்றது. பின்னூல்கள் உயிர்-மெய் இவற்றின் திரிபுகளாக விளக்கி எண்ணிக்கை கூறுங்கால் தனி எழுத்துக்கள் போலக் கூறுகின்றன. இம்மாறுபாட்டினையோ குழப்பங்களையோ இலக்கண ஆய்வாளரும் மொழியியலாளரும் கண்டு கொள்ளவில்லை. சிவஞான முனிவர் போன்ற சிலர் திறனாய்வே செய்துள்ளனர். எது உண்மை எது போலி என உறுதி செய்யவில்லை.

இனி இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட உயிர்மெய் எழுத்தினைத் தொல்காப்பியரும் வீரசோழிய ஆசிரியரும் தவிர்ந்த பிறர் யாவரும் ஒரு சார்பெழுத்தாகக் கொண்டுள்ளனர். அவர் தரும் விளக்கம் - உயிர்மெய் எழுத்தென்பது - உயிரும் மெய்யும் கூடி அவற்றினடிப்படையில் மூன்றாவதாக அமைந்து நிற்கும் ஓரெழுத்து. அது புணர்ச்சி இலக்கணப் கொள்ளுமிடத்துப் பிரிந்து இரண்டெழுத்தாக நிற்கும், மொழியாக்கத்தின் கண் வருங்கால் ஓரெழுத்தாக நிற்கும் என்பதாகும். அம்முறைமையான் 18 மெய்யும் 12 உயிரோடு கூடி 216 உயிர்மெய்களாகப் பிறக்கும் என்பார். உயிர்மெய் பற்றித் தொல்காப்பியமும் பின்னூல்களும் கூறும் சூத்திரங்கள் பின்வருமாறு :

புள்ளி யில்லா எல்லாமெய்யும்
உருவுரு வாகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவு திரிந்துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்தலாறே (தொல். 17)

மெய்யின் வழியது உயிர்தோன்றுநிலையே
மெய்யொடு இயையினும் உயிரியல் திரியாது (தொல். 10)
மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும் (தொல். 130)

ஓங்குயிர் மெய் மற்றெழுத்தன்று
உயிர்மாத்திரையே பெறும் (வீரசோழியம். 6)

ஓங்குயிர்கள் ஒற்றின் மேல் ஏறி உயிர்மெய்யாம்
ஆங்கிருநூற் றொருபத்தாறாகுமே (நேமி. 3)

புள்ளிவிட் டவ்வொடு முன்னுருவாகியும்
ஏனை உயிரொடு உருவு திரிந்தும்
உயிரளவாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய் (நன். 89)

புள்ளி யில்லா எல்லா மெய்யும்
அவ்வொடு முன்னுரு வாகியும் ஏனை
அதனுருவடக்கி முந்துயிர்த்தல்
உயிர்மெய் என்மனார் உயிர்ந்திசினோரே (இலக்.விள.18)

உயிரே மெய்யணைந்து உயிர்மெய்யாகும்
அவை இருநூற்று ஒருபத்தாறென்ப (தொ. வி. 11)
உயிரே மெய்யூர்ந்து உயிர்மெய் ஆகும் (மு. வீ. 24)

என்பவையாம். இவற்றுள் தொல்காப்பியம் மெய் எழுத்து உயிரொடு கூடி உயிர்க்கும், உயிர்க்குமாறு ஈரியல என்கின்றது தொகை கூறவில்லை.

வீரசோழியம் உயிரும் மெய்யும் கூடிய எழுத்து வேறெழுத்தன்று என்கிறது. தொகை கூறவில்லை.

மற்றவையாவும் உயிர்மெய்யின் கூட்டம் பிறதோரெழுத்து என்கின்றன. 216 என்று தொகையும் கூறுகின்றன.

வீரசோழியத்தின் பின் வந்த நூல்கள் யாவும் தொல்லோர் வரைந்த இலக்கண நெறியினின்றும் பிறழ்ந்து மொழியின் அறிவியற் செம்மையை அழித்துத் திசைமாற்றியுள்ளன.

உயிர்-மெய் பற்றிய தொல்காப்பியக் கோட்பாடு :

உயிர் : உயிரியக்கம் இருவகையாக நிகழும். ஒன்று; தனித்து இயங்குவது. "பன்னீருயிரும்மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்" என்பது. மற்றொன்று மெய் இயங்கத்துணை புரிவது" புள்ளி இல்லா எல்லா மெய்யும் உருஉருவாகி அகரமொடும், ஏனைய உயிரொடும் உயிர்க்குமிடத்து அம் மெய்யின் வழியதாகத் தோன்றுவது. உயிர் தனித்தியங்குங்கால் கண்டத்தினின்று பிறந்து வாயுறுப்புக்களான் தடையுறாமல் வெளிப்படும். மெய்க்குத் துணையாங்கால் அம்மெய் எங்குப் பிறக்கின்றதோ அங்கு அதன் பிறப்பிடத்தே தோன்றி அம் மெய்யின் இயல்புகளாகிய வன்மை மென்மை இடைமைத் தன்மைகளைப் பொருந்தி அதன் ஒலி விளங்கத் தனது மாத்திரையளவோடு வெளிப்படும்.

மெய் : வாயுறுப்புக்களாகிய நா, இதழ், பல், அண்ணம் ஆகியவற்றான் வடிவுபெறும். வடிவுகொண்ட நிலையில் செவிப்புலனாக வெளிப்படாது. அஃதாவது ஒலிக்காது. ஒலிக்க முற்படுங்கால் ஓர் உயிரிசையை இரண்டு நிலைகளில் துணையாகக் கொண்டு ஒலிக்கும். ஒன்று ஓர் உயிரிசையின்பின் அவ்வுயிரிசையின் அனுகரணத்தான் அரைமாத்திரையளவில் வெளிப்படும். அஃதாவது உயிரிசையின் இறிதி நிலையாக நின்று செவிப்புலனாகும். மொழியிடையில் வரினும் தனக்கு மேல்நின்ற உயிரிசையினால் தான் ஒலிக்கும். இங்ஙனம் ஒலிப்புறும் மெய் ‘புள்ளிமெய்’ எனப்படும். இதனைப் புள்ளி என வழங்கும் தொல்காப்பியம். தொல்காப்பியம் புள்ளிஎனச் சுட்டிக் கூறும் இடத்தெல்லாம் ஒலிப்புடைய அரை மாத்திரை மெய் யெழுத்தினையே குறிக்கும். “மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல் என்பது சூத்திரம். (ஈற்றுமெய் என்பது மாறி நின்றது) புள்ளி என்பது அரைமாத்திரை ஒலிப்புடைமையைச் சுட்டும் வரிவடிவ அடையாளம். காலாகிய வரிவடிவம் தனி ஒரு மாத்திரை ஒலியைக் குறிப்பது போல மேற்கிடையான இக்குறியீடு அரைமாத்திரை ஒலியைக் குறித்து நிற்கும் அடையாளமாகும்.

பிறிதொன்று : வாயுறுப்புக்களான் உருக்கொண்டபின் ஓர் உயிரிசையைத் தனக்குமேல் ஊன்றச் செய்து அதனான் உந்தப் பெற்று ஒலிக்கும். ஒருமெய் எந்த உயிரான் உந்தப் பெறுகின்றதோ அஃது அவ் உயிரின் அளவையையே அளவை யாகப் பெறும். காரணம் உருக்கொண்ட நிலையில் அதற்கு ஒலியின்மையான் என்க. அங்ஙனம் உயிரை உடனாகக் கொண்டு அம்மெய் உயிர்க்குமிடத்து அகர உயிராயின் தன் இயல்பான வடிவையும் பிறவாயின் அவற்றின் கோணத்திற்கு ஏற்பச் சிறிது திரிபுற்றும் வெளிப்படும். [ப, பா, பி, பு, என ஒலித்து இதழின் கோணங்களை அறிக.]

அங்ஙனம் உயிரான் உயிர்ப்புற்று இசைத்தலின் அஃது உயிர்க்கும் மெய் என்னும் பொருளில் ‘உயிர்மெய்’ என நிகழ்கால வினைத்தொகையாகக் குறியீடு பெற்றது. இதனைப்

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமொடு யிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்தலாறே” எனத் தெளிவாகக் கூறுகின்றது
தொல்காப்பியம்.

"உயிர்த்தலாற்றான் மெய் ஆயீரியல" எனக் கூட்டிப் பொருள் காண்க.

எனவே தொல்காப்பியம் உயிர்மெய் என்பது மெய்யின் பிரிதொருநிலை என்று சுட்டியதன்றி மெய்யும் உயிரும் கூடி மூன்றாவதாகப் பிறக்கும் ஓர் எழுத்தெனக் கூறவில்லை, என்பதை நினைதல் வேண்டும். மொழியிறுதியில் வரும் மெய், புள்ளியுற்று வருதல் போல மொழி முதற்கண் வரும்மெய் உயிரான் உந்தப் பெற்று வரும் என்பது விளங்க "உயிர்மெய் அல்லன மொழிமுதலாகா" என்கின்றது தொல்காப்பியம். உயிர்மெய்யுள் ஒலிப்பதும் தலைமை பெறுவதும் மெய்யே ஆதலானும் புணர் மொழிக்கண் மொழி முதலாக நின்று விகாரங்களை எய்துவதும் அதுவே ஆகலானும் உயிர்மெய் என்பது மெய்யயினது பிறிதொரு நிலையே என்பது விளங்கும். மேலும் மெய்ம்மயக்கத்துள் ஒலிமயக்கமுறுவது மெய்யே என்பதையும் அம்மெய் உயிர்மெய்யாகவே நிற்பதையும் கண்டுகொள்க. எனவே உயிர்மெய் என்பது எழுத்தான் மெய் எழுத்து என்பதும் புணர்ச்சிக்கண் ஒலியாற் இருகூறாகப் பிளவுபடும் என்பதும் தெளிவாகும்.

புணர்ச்சி என்பது ஒலிகளின் இணைப்பே யாதலின் ஒரு சொல்லின் ஈற்றெழுத்தாக நிற்கும் புள்ளி மெய் வருமொழி உயிர் முதலாகவரின் ஒலிப்புடையதாக நிற்கும் அப்புள்ளி மெய் தனது ஒலிக்கும் தன்மையை விட்டு விட்டு ஒலிப்பில்லாத மெய்யாக மாறி எதிர்வரும் உயிரை ஏற்று உயிர்மெய்யாக ஒலிக்கும். இந்நுட்பமான இயல்பினைத் தொல்காப்பியம்

"புள்ளியீற்றுமுன் உயிர்தனித்தியலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே"

எனக் கூறுகின்றது. அவ்வியல் என்றது ஒலிக்கும் இயல்பினை. ஏன் எனில்? ஒலிப்பு நின்றலான்றி உயிர் ஏறற்கு இயலாதாகலான். அங்ஙனம் புணர்ந்த புணர்மொழி பிரியுங்கால் அம்மெய் மீண்டும் புள்ளியாகி (ஒலியாகி) ஒலிக்கும் இதனை "மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும்" என விளக்குகின்றது தொல்காப்பியம்.

இனி உயிர்மெய் என்பது இரண்டு ஒலியன்கள் இணைந்த கூட்டெழுத்தேயன்றி மூன்றாவதாகப் பிறந்ததொரு தனியொலியன் அன்று என்பதை

கடல் - அடல். பாடல் - ஆடல் என்னும் சொற்களானும் கடல், மடல், படல் என்னும் சொற்களானும் தெரியலாம். அங்ஙனம் இரண்டு ஒலியனாக நிற்பவற்றை ஓர் ஒலியனாகக் கூறுவது அறிவியலுக்குப் புறம்பானதாகும். க் + ஆ = கா எனக் கூட்டிய வழியும் கா → க் + ஆ எனப் பிரித்த வழியும் இரண்டொலியன்களாக உள்ளமையன்றி மூன்றாவது ஒலியனாகப் பிறிதொன்றில்லை என்பது தோற்றம். கா எனவும் கி - கீ எனவும் நின்ற வரிவடிங்களை நோக்கி மூன்றாவதாக எண்ணுவது நகைப்பிற்குரியது ஆகும். இருவரிவடிவங்கள் இணைந்தமையான் வரிவடிவம் வேறுபட்டதன்றி ஒலிகள் வேறுபட்டன அல்ல. சத்தியும் சிவமும் தனித்தனி நிற்பினும் உமாமகேசுவரனாக இணைந்து நிற்பினும் பொருள் இரண்டே என்பதில் ஐயமில்லை. அவ்வாறே உயிர்மெய்யெழுத்து என்பது பஞ்சு நூலையும் பட்டு நூலையும் ஒன்றுபடத் திரித்த கயிறு போன்றதாகும். மஞ்சளும் சுண்ணமும் கலந்த கலவை போன்றதன்று என்பதை அறிதல் வேண்டும். மஞ்சளும், சுண்ணமும் சேர்ந்த கலவையின் மூன்றாவதாகப் பிறக்கும் செவ்வண்ணம்போல உயிரும் மெய்யும் கூடியவழி அவற்றின் வேறாக மூன்றாவதோர் ஒலியன் தோன்றாமையின் உயிர்மெய் என்பதனை அன்மொழித்தொகை என்பது கானல் நீர் போன்றதாகும்.

இனி, பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவனார் போன்றோர் கூறுமாறுபோல கஅடஅல் (கடல்) வஅரஆல் (வூரால்) என மெய்யையும் உயிரையும் மேலையாரிய மொழி களைப்போலப் பிரித்தெழுதும் படி ஒரு பொல்லாத சூழல் நேரு மாயின் நன்னூலும் இன்றைய எழுத்துச் சீர்திருத்தவாதிகளும் கூறும் உயிர்மெய் எழுத்துக்கொல்லாமலே மாண்டுவிடுமே. அந்நிலையில் உயிர்மெய் என்பது ஓர் சார்பெழுத்து என்பதும் அது 216 என்பதும் எங்குச் சென்று ஒழியும்? இவ்வாறு ஓர்மாயத் தோற்றத்தை உண்டாக்கிய இலக்கணக் கொள்கையை இதுகாறும் நம்பி மாணவரைப் பயிற்றுவிக்கும் அதிசயம் ஆயிரத் திருநூறு ஆண்டுகளாகத் தமிழகத்து நிகழ்ந்து வருதலை என்னென்பது? இங்ஙனம் உருவையும் நிழலையும் இரண்டாகக் கருதுவது நாணத்தக்கதன்றோ. இதுநிற்க. உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு எனப்பெருக்கிக்கூறிய கணக்கைப் பார்ப் போம். உயிர் 12 மெய் 18 இவற்றை ஒன்றொடு ஒன்றாக

உறழ்ந்தால் 216 வரும். இவற்றுள் உயிரைக் கொண்டு பெருக்கினால் உயிர் 12ம் மெய் 216ம் ஆகும் மெய்யைக் கொண்டு பெருக்கினால் மெய் 18ம் உயிர் 216ம் ஆம். பின் இலக்கண ஆசிரியர்மார் ஒருவர் உயிராற் பெருக்குகிறார். ஒருவர் மெய்யாற் பெருக்குகிறார். பெருக்குத் தொகையாகிய இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யைப் பிரித்தால் 216 உயிரும் 216 மெய்யும் கிடைக்கின்றன. இங்ஙனம் 216 உயிரும் 216 மெய்யும் உளவராகக் கொண்டபின் "உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே" என்பது போலியன்றோ. அது உண்மை என்றால் உயிரும் மெய்யும் கூடி வரும் என்றும் அவை ஒலி எழுத்துமுறையின் முப்பது. வரிவடிவம் அவையிரண்டினையும் கூட்டி எழுதப் பெறும் அவை சொல்லாக்கங்களுக்கு ஏற்ப வரும் என்றன்றே கூறியிருத்தல் வேண்டும். அங்ஙனம் அறிவியலுக்குப் ஏற்பக் கூறியிருந்நால் "அடேங்கப்பா தமிளள் 247 எழுத்து, என்றும் ஙா, ஙி, ஞூ, ஞோ...... போல்வனவாகிய இவ்வெழுத்துக்கள்ளாம் தேவையில்லே என்னும் சீர்திருத்தம் பேசும் வாய்ப்பே நேரா திருந்திருக்குமே.

ஒருவர் தன் நண்பர் ஐவரொடு தனித்தனி நிழற்படம் எடுத்துக்கொண்டார். அவ் ஐந்து படங்களையும் பார்த்த அவர் குழந்தை எனக்கு ஐந்து அப்பா இருக்கிறார் என்று கூறுவதற்கும் உயிரும் மெய்யும்கூடிய வரிவடிவங்களையெல்லாம் கூட்டி216எழுத்து உள என்று கூறுவதற்கும் வேற்றுமை இல்லையே.

மற்று "ஓங்குயிர் மெய்மற்றெழுத்தன்று" எனப் புத்தமித்திரனார் கூறியதையும் "புள்ளியில்லா எல்லா மெய்யும் உருவுருவாகி அகரமொடுயிர்த்தலும் ஏனன உயிரொடு உருவு திரிந்துயிர்த் தலும் ஆயீரியல உயிர்த்தலாறே" எனத் தொல்காப்பியர் கூறியதையும் உள்ளவாறு உணராமலும் தொல்காப்பியச் சூத்திரம் வரிவடிவு பற்றிக் கூறுவதாகப் பிழை படக்கருதியும் தமிழ் நெறியறியாமல் பிற்கால இலக்கண நூலார் வித்திய விதை நாணத்தக்க விபரீதங்களை விளைத்துள்ளமையை என்னென்று சொல்வது?

"உயிர்மெய் அல்லன மொழி முதலாகா"

எனத் தொல்காப்பியம் கூறும் உயிர்மெய் என்பதும் இரண்டு ஒலியன்களின் கூட்டமே எனினும் அதுகூறும் முறைமை

அறிவியலுக்கு ஒத்ததாகும். அஃதாவது அகரமுதல் ஔகார இறுவாயாகிய பன்னிரண்டும் உயிர் எழுத்துக்களே எனினும் இசைக்கும் முறைமையான் அவை குறில் நெடில் என வகைப் பட்டுப் புணர்மொழிக்கண் வேறுபட்ட விதிகளைக் கொள்ளுமாறு போல இனத்தான் மூவகைப்பட்ட 18 மெய் எழுத்துக்களும் ஒலிக்கும் முறைமையான் புள்ளி என்றும், உயிர்மெய் என்றும், வகைப்பட்டு ஒலிக்கும் என்கின்றது.

அஃதாவது வடிவுகொண்ட நிலைமைக்கண் செவிப் புலனாகாத (ஒலிக்காத) மெய் ஓர் உயிரிசைக்குப் பின் வருங்காலும், ஓர் உயிரிசையை ஏற்று வெளிப்படுங்காலும் செவிப்புலனாக ஒலிக்கும் என்றும், அங்ஙனம் உயிரிசைக்குப் பின் ஒலிக்கும் மெய்யைப் புள்ளி என்றும், உயிரிசையை ஏற்று வரும் மெய்யை உயிர்மெய்யென்றும் மெய் ஒலிகள் புணர்ச்சி விதி எய்தும் வேறுபாடுகளுக்கு ஏற்பக் கூறுகின்றது. புள்ளியாக ஒலிக்கும் பொழுது அதன் ஒலியளவு அரைமாத்திரை என்று கூறுகின்றது. இதனை,

மெய்யின் அளபே அரையென மொழிப
மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்

என்பவற்றான் அறியலாம். உயிர் மெய்யாக இசைகுங்கால் எந்த உயிர் 'துணையாகின்றதோ அவ்வுயிரின் இசையளவையையே மாத்திரையளவாகப் பெற்றிசைக்கும். அங்ஙனம் துணையாக வரும் உயிர் எந்த மெய்க்குத் துணையாக வருகின்றதோ அந்த மெய்யின்பிறப்பிடத்திலேயே அம்மெய்யின் தன்மையைப் புலப்படுத்திப் பிறந்துவரும். அந்நிலையில் ஒற்றுமை நயத்தான் ஓரெழுத்தாயும் புணர்ச்சிவகையான் ஒலியும் இசையுமாக ஈரொலியனாகவும் பிளவுபட்டும் நிற்கும் என்கின்றது. இதனை,

மெய்யின் வழியது உயிர்தோன்றுநிலையே
புள்ளியில்லா … … … உயிர்த்தலாறே — (தொல்-17)

(இச்சூத்திரத்திற்கு எழுவாய் 'மெய்' என்பதையும் உயிர்த்த லாற்றான் ஈரியல என்பது பயனிலை என்பதையும் அறிந்து கொள்க).

உயிர்மெய் யல்லன மொழி முதலாகா (மொழி. 27)
உயிர்மெய்யீறும் உயிரீற்றியற்றே (புண. 4)
“எல்லாமொ மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென்றாயீரியல ” (புணரி. 1)

4741

மெய்உயிர் நீங்கின் தன்னுருவாகும் (புண. 37)

என்பவற்றான் தெளியலாம்.

தொல்காப்பியம் ஒலிஉருவ எழுத்துக்களுக்கே இலக்கணம் கூறுகின்றது, என்பதையும் எழுத்து வடிவுகொள்ளும் முறைமையைக் கூறுவதே பிறப்பியல் என்பதையும்

"ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி"
" இகர உகரத்தியற்கையுமற்றே "
(எகரம் ஒகரம் என்பது பிழையானபாடம்)

"உட்பெறுபுள்ளி உருவாகும்மே'

எனவருவனவும் ஒலிவடிவ இலக்கணமே என்பதையும் தெளிதல் வேண்டும்.

[இவற்றின் செம்மையான பொருள்களை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு கொள்க.]

தமிழ் எழுத்துக்களின் ஒலி, இசை, ஓசைமரபுகளை ஓர்ந்து நுணுகியுணர்ந்த தொன்னூலோர் 'உயிர்மெய்' எழுத்து உயிரின் துணையான் இசைக்கின்றமையைத் தெளிவாக உணரும் வண்ணம் வரிவடிவம் செய்து கொள்ளுமிடத்தும் அவ்வக்காலத்து அமைத்துக்கொண்ட மெய்களின் வரிவடிவத்தை முழுமை யாகவும் அவற்றின் கண் ஏறி உயிர்க்கச் செய்யும் உயிர்களின் வரிவடிவத்துள் ஒரு கூறினையும் இணைத்தே அமைத்துச் சென்றனர். காரணம் உயிர்ப்பது மெய்யும், உயிர்க்கச் செய்வது உயிருமாகாலான்; இவ் அறிவியல் நோக்கினைக் காணாமலும் மெய் தனித்தியங்காது என்பதைக் கருதாமலும் மேலையாரிய மொழிகளைப்போல மெய்யையும் உயிரையும் தனித்தனியாக எழுதலாம் எனச் சிலர் கூறுகின்றனர்.

வரிவடிவத்தையும் ஒலிவடிவத்தையும் பிரித்துணராத குறையானே எழுத்துச்சீர்திருத்தம் என்னும் பெயரால் பலர் குழம்பியும் குழப்பியும் வருகின்றனர். (இதுநிற்க)

இதுகாறும் கூறியவற்றான் உயிர்மெய் என்பது உயிர்க்கும் மெய் என்னும் பொருளுடையது என்பதும் அதனால் அத்தொகை வினைத்தொகை என்பதும் புலனாகும்.

பிறவிளக்கங்களை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுள் கண்டுகொள்க.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஏப்ரகாமும் சிறுத்தொண்டரும்

நா ஆறுமுகம்
இணைப்பேராசிரியர்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி.

பயிரவராம் முதல்வர் அந்தவிடத்தில் மறைதருளினார் வெந்த இறைச்சிக் கறியமுதம் கலத்திற் காணவில்லை. அமுது செய்யாது ஒளித்த சிவபெருமான் பார்வதியோடும் சரவணத்துத் தனயனாகிய முருகனோடும், சிறுத்தொண்டருக்கும் அவர்தம் இல்லத்தினர்க்கும் காட்சி தந்து அருள் செய்தார். இதுவே சிறுதொண்டர் வரலாறு.

இந்த இருபெரும் வரலாற்றிலும் சில பொதுத் தன்மைகள் இருப்பதை உணரலாம்.

1. இறைவன் தலையீடு :

அ) இபுராகிமினுடைய கனவில் இறைவன் தோன்றி பிள்ளையை - இஸ்மாயிலைப் பலியிடுமாறு கேட்கிறார்.

ஆ) சிறுத்தொண்டரின் கனவில் அல்ல, நேரான வாழ்க்கையில் பிள்ளைக்கறி - சீராள தேவரை இறைவன் அல்லாமல் இறையடியார் (வயிரவர் உருவத்தில் வந்த இறைவன்) கேட்கிறார்.

2\. அ) பிள்ளையை - இஸ்மாயிலைப் - பலிகொடுக்கும்போது பெற்ற தாய் தந்தையரான இபுராகிமும் அவர் மனைவியும் இறைவன் விருப்பத்தை மனமார மகிழ்ச்சியோடு நிறைவேற்ற முயல்கின்றனர்.

ஆ) இறையடியார் விருப்பத்தை நிறைவேற்ற - சீராள தேவரைப் பிள்ளைக்கறி சமைக்கத் தாய் பிடித்துக் கொள்ள தந்தை மகிழ்ச்சியோடு தலையை அரிகின்றார்.

3\. அ) இறைவன் தன் ஒரே மகனைப் பலியிடச் சொல்வாரா என்னும் சந்தேகமோ. அப்படிக் கேட்பது முறையா என்னும் எண்ணமோ இபுராகிமுக்கு வரவில்லை.

ஆ) இறையடியாரான வயிரவர் பெற்றோருக்கு ஒரே மகனின் கறியைச் சமைக்கச் சொல்வாரா என்னும் சந்தேகமோ, அப்படிக் கேட்பது முறையா என்னும் எண்ணமோ சிறுத்தொண்டருக்கு எழவில்லை.

4. இறைவன் சொல்வதை நிறைவேற்ற வேண்டும் என்று இபுராகிம் கருத, இறையடியார் கேட்பதைக் கொடுக்க வேண்டும் என்று சிறுத்தொண்டர் எண்ணுகின்றார்.

5. 'இறைவன் நாட்டப்படியே உங்கள் கைகளால் அறுத்துப் பலி கொடுங்கள் நான் அமைதியாகவே இருப்பேன்' என்று பலியாகப்போகும் இஸ்மாயீல் மகிழ்ச்சியோடு வெளிப்படையாகக் கூறுகின்றார்.

தன்னை அறுத்துக் கறி சமைக்கப் போகின்றார்கள் என்பதை வெளிப்படையாக அறியாத சீராளன், தன் கைகளைத் தாயும், தலையைத் தந்தையும் பிடித்துக் கொண்டபோது 'பெற்றோர்கள் உவகை உறுகின்றார்கள், என்று மகிழ்வோடு சிரித்தார்.

6. இபுராகிம், தம் மகன் இஸ்மாயிலைப் பலியிடப்போகும் போது ஆண்டவனே பலியைத் தடுத்து நிறுத்தி, அதற்குப் பதிலாக ஓர் ஆட்டைப் பலியிடுமாறு பணிக்கின்றான்.

சிறுத்தொண்டர் பிள்ளைக் கறியை உண்ணத் தொடங்கும் போது, இறையடியார் தடுத்து நிறுத்திச் சீராளனை அழைக்கச் சொல்ல, சீராளன் ஓடி வருகின்றான்.

7. இறைவனுக்காகத் தம் உயிரையே தரத் துணிந்த தியாகச் செயல் போற்றப் பெறுகிறது. இஸ்மாயீல் வரலாற்றில், இறையடியாருக்காகத் தன் ஒரே மகனையும் இழக்கத் துணிந்து இழந்த தியாகச் செயல் சிறுத்தொண்டர் வரலாற்றில் உணர்த்தப்படுகிறது

இந்த இருபெரும் வரலாற்றுக் கூறுகளிலிருந்து அறியலாகும் ஒரு சமூகவியல் உண்மையைக் காணலாம்.

இபுராகிம் — இஸ்மாயில் வரலாற்றுக்குக் காரணமான சமுதாயச் சூழல் என்ன ? நபிகள் நாயகம் தோன்றிய காலத்தின் (570 கி பி.) நிலை குறித்து அன்னிபெசன்ட் அம்மையார் கூறுகின்றார்,

> " Look at Arabia Arabia when there is a fierce and cruel idolatory that even offers up human beings in sacrifice to idols, and where the worshippers feast on the bodies of the dead ; where lust has taken the place of human love, and utter licentiousness the place of family life ; where bitter and bloody wars break out on the slightest prouocation ; where Kinsman slays Kinsman and neighbour, and life is almost too foul for words .'

'உருவ வழிபாடு போற்றப்பட்டது. மாந்த உயிர்களைக் கடவுள் உருவத்திற்குப் பலிகொடுக்கும் பழக்கம் இருந்தது. இறந்தவர்களின் உடல்களை வைத்து உருவ வழிபாட்டினர் விருந்தும் படைத்தனர். உள்ளக் கலப்பான காதலுக்குப் பதில் உணர்ச்சி கொண்ட சதை வெறியான காமம் எங்கும் கோலோச்சியது. குடும்ப உறவில் ஒழுக்கச் சிதைவே நிறைந்திருந்தது. சிறிய மாறுபாட்டிற்காகப் பெரிய சண்டைகளும் சச்சரவுகளும் தோன்றின. சகோதரர்களைச் சகோதரர்களே கொல்வதும், உறவினர்களை உறவினர்களே அழிப்பதும் எளிதாக நடந்தன. சொற்களினால் சொல்ல முடியாதவாறு வாழ்க்கை நாற்றமெடுத்துப் போயிற்று. அன்பின் வழியான மாந்த வாழ்க்கை கொலை, களவு, காமம் ஆகியவைகளின் நரகமாகத் திகழ்ந்தது.'

சிறுத்தொண்டர் வரலாற்றுக்குக் காரணமான சமுதாயச் சூழல் என்ன? திருஞானசம்பந்தர் போன்ற நாயன்மார்கள் தோன்றிய தமிழகத்தின் நிலை குறித்து வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளை கூறுகிறார்.

> "நாயன்மார்களும் ஆழ்வார்களும் அளவையால் கட்டுண்டு கிடக்கும். தத்துவங்களையோ, உயிர்ப்பை ஒடுக்கும் யோக நெறியையோ, கடவுள் முன்னிலையில் தன்னையே அழித்துக் கொள்ளத் தூண்டும் உணர்ச்சி வெறியையோ பாராட்டிலர். கடவுளிடத்து அயராத அன்பு ஒன்றையே அவர்கள் மக்களுக்குப் போதித்து வந்தனர். நாயன்மார்கள் ஆழ்வார்கள் ஆகியவர்களுள் ஒருவரேனும் துறவு பூண்டுக் காட்டிலும் மலையிலும் ஒடுங்கி வாழ்ந்தவர்கள் அல்லர் ... அவர்கள் மக்களிடையே வாழ்ந்து

வந்தார்கள் .. பெரிய புராணத்துள் சேர்க்கப் பட்டுள்ள அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான சிறுத்தொண்டநாயனார் நரசிம்ம வர்மனின் படைத்தலைவராகப் பணியாற்றி வாதாபியை முற்றுகையிட்டு இரண்டாம் புலிகேசியின் மேல் மாபெரும் வெற்றி கொண்டார். பிறகு மன்னனுடைய வேண்டுகோளின்படித் தாம் பிறந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடியை அடைந்து திருவெண்காட்டு நங்கையுடன் மனையறம் நடத்தி வந்தார். இவர் காலத்தில் **காபாலிகர், காளாமுகர், பாசுபதர்** என்னும் சமயத்தைச் சேர்ந்த **வைராகிகள்** தமிழகத்தில் உலவி வந்தனர் என அறிகின்றோம்''...

... விரிசடை விரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், காபாலிகள், தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே...' என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார். **அவர்கள் சக்தி வழிபாடு செய்பவர்கள்;** தேவிக்கு **நரபலி கொடுக்கவும் தம் உயிரையே அவளுடைய திருவடிகளில் சேர்ப்பிக்கவும் அஞ்சாதவர்கள்.** அத்தகைய வைராகி ஒருவர் சிறுத்தொண்டரை அண்மித் தமக்குப் பிள்ளைக்கறி சமைத்துப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டாராம். சிவவேடந்தரித்தவர்கள் யார் எதை விரும்பினாலும் மறுக்காது வழங்கும் வள்ளன்மை பொருந்திய சிறுத்தொண்டர் தம் குழந்தை சீராளனையே அரிந்து கறி சமைத்து வைராகிக்குப் படைத்தாகவும், வைராகி மறைந்து விட்டதாகவும், சிவபெருமானே காட்சி தந்ததாகவும் பெரிய புராணம் கூறும்.

சமயக் கொள்கைகள் சமயப்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. சமயப் பண்பாடோ சமயத்தைப் பின்பற்றும் சமுதாயத்தைக் கொண்டே அமைக்கப்படுகின்றது. பண்பாடு பற்றிஇ.பி. டைலர் (E.B. Tylor) கூறுவதாவது.

" சமுதாயத்தின் அங்கமான மனிதன் பெறுகின்ற அறிவு, நம்பிக்கை, கலை, நீதி, சட்டம், வழக்கம் இவைகளுக்கே பண்பாடு என்று பெயர்.

Culture is "that complete whole which includes knowledge, *belief,* art, morals, law, *custom,* and any other capabilities and habits acquired by man as a member of society" (Cultural Anthropology by Melville J. Herskovits, P. 305).

மனித அனுபவம் என்னும் வகையில் பண்பாடு உலகப் பொதுவான ஒன்றாகத்தான் உள்ளது. எனினும் மாந்தன் வாழுகின்ற வட்டாரத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ப அது தனித் தன்மை பெற்று விளங்குகிறது.

> ''Culture is universal in man's experience, yet each local or regional manifestation of it is unique - P. 306).

பண்பாடு என்பது மக்கள் வாழும் நெறிமுறை என்றும் குறிப்பிட்ட நெறிமுறைகளின்படி ஒருவரை ஒருவர் சார்ந்துவாழும் கட்டுப்பாடான தனி மாந்தர்களின் கூட்டமைப்பே சமுதாயம் என்றும் கூறுவர்.

> "A culture is the way of life of a people; while a society is an organised interacting aggregate of individuals who follow a given way of life - (P. 316)

இந்த இலக்கணங்களின்படி பார்த்தால் இபுராகிம் வாழ்க்கை நெறிக்கும், சிறுத்தொண்டரின் வாழ்க்கை நெறிக்கும் அடிப்படையான சமுதாயப் பண்பாட்டு நெறிமுறை விளக்கமாகும்.

நூல் அறிமுகம்

'கனித் தொகை' கவிதை தொகுப்பு
ஆசிரியர் : தரங்கை பன்னீர் செல்வன்
கிடைக்குமிடம் : அரிமாப் பதிப்பகம்
அம்மாப்பேட்டை. **சேலம் 636003**

• **விலை :** ரூபாய் **12/-**
பக்கம் : 114.

திராவிடப் பாரம்பரியத்தைச் சார்ந்த பாவலர், தரங்கைப் பன்னீர் செல்வன் இயற்றியுள்ள மரபுக் கவிதைகளின் தொகுப்பு. ஈழத்துச்சிக்கல், புதிய கல்விக்கொள்கை, சமூகப் பொதுமை, தமிழன் நிலை, போன்றவைகளை பிரதிபலிக்கும் உணர்ச்சி மிக்க கவிதைகள்.

பேராசிரியர் ந. இராமநாதன் நூலின் முகப்புரையில், ''உருவமும் உள்ளீடும் ஒருங்கிணைந்து உருவெடுத்துள்ள பாடல்களைப் பாடவல்லவர் பாடினால், கேட்போரின் உள்ளுணர்வைத் தூண்டவேண்டுமென்பது பாடல்களால் பெறப்படும் பயன்''-எனக் கூறுவது போன்று இக்கவிதைகளை படிப்போரின் உள்ளுணர்வு தூண்டப்படும் என்பது உண்மை.

—எஸ். செந்தில் குமார். M. A, M. Phil.,

திருவள்ளுவர் கூறும் மருதம்

இரா. கணேசன் எம். ஏ., பி. எட்.,
தமிழாசிரியர்,
உமாமகேசுவர மேனிலைப் பள்ளி,
தஞ்சாவூர்-2.

மருதத் திணையை சங்க நூல்களாகிய குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு மற்றும் பிற நூல்கள் கூறும் முறை வேறு; திருக்குறள் நூல் கூறும் முறை வேறு. திருக்குறள் கூறும் மருதத்தில் தலைவன் பரத்தையை நாடிச் செல்வதில்லை. மற்ற நூல்களில் தலைவன் பரத்தையை நாடி செல்வது உண்டு. பொருள் அடிப்படையாக மகளிர் சிலர் ஒழுக்கத்தை விற்பது கூடாது; ஒழுக்கமற்ற மகளிரை ஆடவர் நாடுவதும் கூடாது என்று பொருட்பாலில் வள்ளுவர் வன்மையாக சாடுகிறார். வரைவின் மகளிர் என்ற அதிகாரம் திருவள்ளுவர் சீர்திருத்தத்தை விளக்குவது ஆகும். சங்ககாலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் பரத்தையார்பால் தலைவன் சென்று வருவது இயல்பான செயலாகக் கருதப்பட்டது. அக்காலத்து நூல்களில் எல்லாம் இடம் பெற்று வந்த பரத்தையருக்குத் திருக்குறளில் சிறப்பிடமில்லை. கூடா ஒழுக்கம் என்று கடியப்படும் இடம் ஒன்றே கிடைத்தது. ஆதலின் திருவள்ளுவர் மருதத்திணைக்கு முன்னர் வகுத்துக் கூறிய இலக்கணத்தையும் புறக்கணித்துப் பரத்தையருக்குக் காமத்துப்பாலில் இடம் இல்லாமல் செய்தார். நூலோர் மரபையும் கடந்து புதுவழிவகுத்தார்; இஃதோர் வள்ளுவர் கண்ட மரபு புரட்சியும் கொள்கை புரட்சியும் எனலாம்.

திருவள்ளுவர் கூறும் இன்பத்துப்பாலில் தலைவன் தலைவி ரிடையே ஊடல் உள்ளது. தலைவி ஊடுகிறாள். தலைவன் தவறு செய்ததாகக் கற்பனை செய்து கொண்டு விளையாட்டாக ஊடுகிறாள். தலைவி தலைவனைப்பார்த்து எல்லாப் பெண்களும் கண்ணால் உன்னைக்காண, கற்பு இல்லாதவனாகிய உன்னை நான் நெருங்க மாட்டேன் என்கிறாள்.

“ பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்
நண்ணேன் பரந்தநின் மார்பு (குறள்)

காதலன் ஒரு மாலையைச் சூடிச் சென்றான். அந்த மாலை வேற்று நிலத்துக் கோட்டுப் பூக்களால் ஆகியது. அதை காதலி கண்டதும் ஊடுகின்றாள். இரண்டாம் காதலி யாரோ ஒருத்திக்கு, இந்த அழகைக் காட்ட வேண்டும் என்று தான் சூடியிருக்கின்றார் என்று ஊடுகின்றாள்.

"கோட்டுப்பூச் சூடியும் காயம் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று" —(குறள்)

காதலன் அன்பு மிகுதியால் காதலர் யாரையும் விட நாம் காதல் மிகுந்தவர்களாக இருக்கின்றோம் என்றான். நீர் பல மகளிரைக் காதலிக்கின்றீரோ? அவருள் என்னிடம் அன்பு மிகுதியோ? என்னைப் போன்ற காதலியர் பலர் உளரோ? அதனால் தான் யாரையும்விடக் காதல் மிகுதி என்றீரோ? அவர்கள் யார்? என்று கேட்டு ஊடுகின்றாள்.

"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினாம் என்று" —குறள்

இந்தப் பிறப்பில் நாம் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய மாட்டோம் என்றான் தலைவன். அப்படியா! இவ்வொரு பிறப்புத்தானா? மறு பிறப்பில் பிரியக் கருதி விட்டீரோ என்று ஊடிக்கொண்டு தலைவி கண்ணீர் உகுக்கின்றாள்.

"இம்மை பிறப்பில் பிரியலம் என்றேனா
கண்ணிறை நீர் கொண்டனள்" —குறள்

பிரிந்து சென்றிருந்த போது உன்னை அடிக்கடி நினைத்தேன் என்றான் காதலன். பிரிந்த உடன் என்னை மறந்து விட்டீரோ? மறந்தால் தான் மீண்டும் நினைத்தீர். இவ்வாறு என்னை ஏன் மறந்து விட்டீர் என்று சொல்லிக் காதலி ஊடுகின்றாள்.

உள்ளினேன் என்றேன் மற்று என் மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள் — குறள்

ஊடல் நீடிக்கின்றது. தலைவனுக்குத் தும்மல் வருகிறது. தும்முகின்றான் வழக்கம்போல், தலைவி நூறு ஆண்டு வாழ்க என்று தும்மல் கேட்டு வாழ்த்துகின்றாள். ஆனால் இவ்வாறு தன் வாயால் வாழ்த்துப் பெற வேண்டும் என்றும் ஊடலை முடிக்கவேண்டும் என்றும் வேண்டுமென்றே தலைவன் செயற்கையாகத் தும்மியதாக எண்ணுகிறாள். ஊடல் முடிவது போய் மிகுவதாயிற்று. அடுத்த நொடியில் அவளுடைய மனத்தில் வேறோர் எண்ணம் தோன்றியது. யாராவது நினைத்தால்தான் ஒருவர்க்குத் தும்மல் வரும் என்று சொல்வார்கள். இப்போது இவரை யார் நினைத்திருப்பார்கள்? நினைக்கும் உரிமை உடையவள் நான் ஒருத்திதான் என்று எண்ணியிருந்தேனே?

இன்னும் யாரோ ஒருத்தி இவருக்குக் காதலியாக இருக்க வேண்டும். அவள் நினைத்ததால் தான் இவருக்குத் தும்மல் வந்தது" என்று கேட்டு ஊடுகின்றாள்.

இதை உணர்ந்த காதலன் அடுத்து தும்மலை வெளிப்படுத்தாமல் அடக்கிவிட முயல்கின்றான். அதை அறிந்த காதலி தெரிந்து விட்டது, தெரிந்துவிட்டது உம் காதலி நினைக்கின்றாள் என்பது; எனக்கு புலப்படாதபடி மறைக்கின்றீர். அதனால் தான் தும்மலை அடக்குகின்றீர் என்று கூறி அழுகிறாள்.

"ஊடி இருந்தோமத் தும்மினார், யார் தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து"

"வழுத்தினாள் தும்மினே னாக ; அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று".

"தும்முச் செறுப்ப அழுதாள், நுமர் உள்ளல்
எம்மை மறந்தீரோ என்று".

காதலன் இடத்தில் தவறுகண்டுதான் இவ்வாறு காதலி ஊடுகின்றாளோ? அவளே கூறுகின்றாள், அவரிடத்தில் தவறு இல்லை, ஆயினும் அவர் மேன்மேலும் செய்கின்ற அன்பை விரும்பியே ஊடுகின்றேன்.

நிலமும் நீரும் போல் ஒன்றுபட்ட காதலர் வாழ்க்கையில் ஊடுவது தனி இன்பமாக இருக்கின்றது. தேவருலகம் அத்தகைய இன்பம் தருமோ என்கிறாள்.

"இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்லது அவரளிக்கு மாறு.

"ஊடுக மன்னோ ஒளியிழையாம் இரப்ப
நீடுக மன்னோ இரா.

தவறு கண்டு ஊடும் பகுதியும் திருவள்ளுவர்கூறுகின்றார். ஆனால் அது என்ன தவறு என்பதைக் கூறவில்லை. அது பரத்தையரிடம் காதலன் தங்கி வந்த காரணத்தால் நிகழ்ந்த ஊடல் என்று கூறு வதற்கு இடம் இல்லை. வெளியுலக வாழ்க்கையில் பல கடமைகளை மேற்கொள்ளும் தலைவன் தலைவியை மறக்கா விட்டாலும் மறந்தது போல் வாழ நேரும் நாட்கள் சில உண்டு. அத்தகைய நாட்களில் அவளுடைய அன்பு மாறியதாக எண்ணிக் கொண்டு ஊடுகின்றாள். இத்தகைய ஊடலில்

தலைவியின் உள்ள உறுதியைக் காண்கிறோம். ஆனால் அந்த மன உறுதியும் ஓரளவாகவே இருக்கின்றது. அன்புக்கு மாறான வகையில் தவறு செய்த போதிலும் தலைவனைக் காண வேண்டும் என்றே தலைவியின் கண்கள் நாடுகின்றன.

"பேணாது பெட்பவே செய்யினும், கொண்கனைக்
காணாது அமையல கண்"

தலைவனுடைய தவற்றை நினைந்து ஊடவேண்டும் என்று சென்றாள்; ஆனால் அவளுடைய நெஞ்சு அதை மறந்து கூடவேண்டும் என்று சென்றதாம். அவனை நேரில் காணாத போது தவறுகளே நினைவுக்கு வருகின்றனவாம். அவனைப் பார்த்தபோது அந்த தவறுகள் நினைவிலே நிற்பது இல்லையாம். தலைவிக்கு ஓர் உவமையும் நினைவுக்கு வருகின்றது. மைதீட்டு முன் அஞ்சனக் கோலின் தன்மை நன்றாகக் கண்ணுக்குத் தெரிகின்றன ஆனால் மைதீட்டும் நேரத்தில் கண் அந்த அஞ்சனக்கோலைக் காண முடிவதில்லை அதைப்போல தலைவனைக் காணாதபோது அவனுடைய தவறுகள் தெரிகின்றனவாம்; கண்டபோது அவை தெரிவதில்லையாம்.

"ஊடற்கண் சென்றேன்மன் தோழி, அது மறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து"

காதலி தன் நிலையை எண்ணுகின்றாள்; வெள்ளத்தின் ஆற்றலை அறிந்தும், அதில் பாய்ந்து அதை எதிர்க்க முடியாமல் அதோடு செல்பவரைப் போல் தலைவரின் ஆற்றலை அறிந்தும் ஊடமுயன்று தோற்கின்றேனே என்று எண்ணுகின்றாள்.

"உய்த்தல் அறிந்து புனல்வாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலத்து?

"காணுங்கால் காணேன் தவறாய, காணாக்கால்
காணேன் தவறல் லவை

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு — குறள்

காதலின்பம் மலரைவிட மென்மையானது என்றும், இந்த உண்மையை உணர்ந்து பயனடைய வல்லார் சிலரே என்றும் கூறுகின்றார்.

" மலரினும் மெல்லிது காமம் ; சிலர் அதன்
செவ்வி தலைப்படுவார் — குறள்

திருவள்ளுவர் இவ்வாறு ஊடலைக் கூறியும் பரத்தையர்சேரி, தலைவன் புறத்தே செல்லுதல், புனல் விளையாட்டு, ஆடல், பாடல், களியாட்டம்விழா, முதலியவற்றைக் கூறாமல் விடுத்தது ஏன்? அதுதான் திருவள்ளுவரின் உயர்ந்த உள்ளத்தன்மையைத் தெரிவிப்பது.

" ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே, தீய
வழுக்கியும் வாயாற் சொலல் — குறள்

தன்னை மறந்தும் தீயசொல் வாயில் பிறக்காமல் காக்க வேண்டு மென்று ஒழுக்கக் கடமையை வற்புறுத்துகின்றவர் திருவள்ளுவர் வரைவின் மகளிரோடு உறவு கொள்வது ஏற்றதன்று என்று கடிந்தவர் வள்ளுவர் ; அப்படிப்பட்டவர் அதை விளக்கி எழுத மனம் கொள்வரோ?

நன்மை தீமை இரண்டையும் ஆராய வேண்டும். ஆராய்ந்து நல்லவை கொண்டு தீயவை தல்ல வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கொள்கை. ஆனால் அறவோர் இதற்கு உடன்படுவதில்லை. நன்மை தீமை என்று பகுத்து அறிவதே போதும் ; நன்மையை மட்டும் போற்றிப் பாராட்டித் தீமையைத் திரும்பப் பேசாமல் விட்டுவிடவேண்டுமென்பதே சான்றோர் கொள்கை. தீமையைக் காண்பது, கேட்பது, ஆராய்வது இவற்றை அறிவு வளர்ச்சிக்காகவும் மேற்கொள்ளக்கூடாது என்று கடிவது அறவோர் வழக்கம். ஏன்? ஐம்புலன்கள் கீழ்ப் படியிலிருந்து படிப்படியாக முன்னேறி மேல்நிலைக்கு வருபவை விலங்கு நிலையிலிருந்து மக்கள் நிலையை எட்டி உயர்பவை. ஆகையால் அவைகள் தீமையோடு பழகிய பழக்கம் உள்ளவை. தீமையை எளிதில் கற்றுக்கொள்வதுபோல் நன்மையைக் கற்பதில்லை ; தீமையை கற்பின் மறப்பது முடியாது. பரத்தையரின் நட்பு முதலியவற்றை ஆராய்ச்சி என்றும் காரணத்திற்காகக் கற்பதும் புலன்களை கொடுப்பதற்கே தூண்டுதலாகும். இந்த உண்மையை அறிந்தே நாடகம் முதலிய கலைகளில் தீய காட்சிகளை நீக்கி அமைக்க வேண்டு மென்று சான்றோர் வற்புறுத்தி கூறுகின்றனர். ஆனால் நாடகம் முதலிய கலைகளில் தீமையை அறவே நீக்க முடியாது. இலக்கியம் என்னும் அருங்கலை ஒன்றுதான் தீமையை அடியோடு நீக்கி நன்மையை வற்புறுத்தவல்லது.

திருவள்ளுவர் மருதத் திணையைக் காமத்துப் பாலில் அமைக்கமுன்வந்த போது இந்த உண்மையை உணர்ந்து தீமையை விளக்காமல் விலக்கி, நன்மையை மட்டும் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். திருவள்ளுவர் தம் இலக்கியத்தில் பரந்தையர் உறவைக் கூறாமல் விட்டு விட்டு காதலியின் ஊடலால் விளங்கும் உரிமையை மட்டும் எடுத்துரைக்கின்றார்.

நூல் அறிமுகம்

தேடல்.
பதிப்பாசிரியர். க. ப. அறவாணன்.
தமிழ்ப் புத்தகாலயம்.
விலை : 25.

"எண்ணங்கள் காற்றில் கலக்காமல் கருத்தில் கலக்க வேண்டும் நிலைக்கவேண்டும் என்றால் ஆய்வு எழுத்துருவம் பெறுதல்வேண்டும். எண்ணம், பேச்சாக வெளிப்படும் போது பெறும் உருவத்தில் இருக்கும் செம்மைப் பாட்டை விட எழுத்தாக உருவம் பெறும் போது அது மிகுந்த செம்மைப்பாட்டை எய்தும்; எய்தவேண்டும்" நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு புதுவைப் பல்கலைக்கழக தமிழியல்துறை ஆசிரியர்கள்/ஆய்வாளர்களின், சங்க இலக்கியம், இலக்கணம், சமயம், கவிதை, சமூகம், வரலாறு, நாட்டுபறவியல், அரசியல் பற்றிய பதினாறு கட்டுரைகள் அடங்கிய நூல்.

ஆசிரியர் / மாணவர்களின் கூட்டு முயற்சி.

க. ப. அறவாணன் முன்னுரையில் " இந்நூல் 'தேடலின்' முடிவு அன்று ; தொடக்கம் எங்கள் 'தேடல்' தொடர்ந்து கொண்டு இருக்கிறது. எனக் கூறுவது போல் எதிர்காலத்தில் புதுவைத் தமிழியல் துறையிலிருந்து தொடர்ந்து இது போன்ற நூல் வெளிவர வாழ்த்துகிறோம்.

— எஸ். செந்தில் குமார் M. A., M. Phil,

குலமரபுச் சின்னம்

டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

பழங்குடி மக்களிடம் இடம்பெறும் சில பண்பாடுகள் அல்லது பழக்க வழக்கங்கள் பொருள் உள்ளவைகளாக இருக்கின்றன. அத்தகு பண்பாடுகள் போன்றவை நாகரிகமக்களிடம் இடம் பெற்றும் அவைகளுக்குப் பொருளுள்ள பயன்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. மானிடவியல் அறிஞர்கள் (Anthropologists) இத்தகு, பண்பாட்டு எச்சங்கள் (Cultural Anthropology) குறித்துக் கவனம் செலுத்திவருகின்றனர். அவ்வகையில் குலமரபுச் சின்னம் (To temism) என்ற முறைமையும் ஒன்றாகும்.

இனக்குழு மக்கள் விலங்குநிலை வாழ்க்கையிலிருந்து விடுபட்டு உயர்ந்த சமுதாயநிலை வாழ்க்கையை (Socialization) அடைவதற்கு, இத்தகு குலமரபுச் சின்னம் போன்றவை உதவி உள்ளன. சமயத்தின் தோற்றம் பற்றியும் (origin of religion) மணஉறவு பற்றிய பாரம்பரிய வளர்ச்சி நிலைகளை மீட்டுருவாக்கம் (reconstrction) செய்ய விரும்புவோரும் குலமரபுச் சின்னம் பற்றிய ஆய்வினையும் அதன் கோட்பாட்டு வளர்ச்சியினையும் (Totemistic theory) ஒதுக்கித்தள்ள இயலாது.

ஆங்கிலத்தில் 'Totem' என்ற சொல் கி. பி. 1071 - இல் வந்ததாகக் கூறுவர். பீட்டர் ஜோன்ஸ் (Peter Jones) வட அமெரிக்காவில் அல்கோன்கியான் (Algonkian Indian) என்ற பழங்குடி இன மக்களிடம் ஆய்வுநடத்தியவர். அம்மக்களின் வழக்கு மொழியில் 'Ototeman' என்ற சொல் உண்டு. இதன் பொருள் சகோதர சகோதரி உறவினைக் குறிக்கும். (His brother Sister Kin) என்று எடுத்துக்காட்டுகிறார். நாளடைவில் இச்சொல்லினை மானிடவியலார் ஆங்கிலத்தில் 'Totem' என்ற கலைச்சொல்லாக அமைத்துக் கொண்டனர் (Ototemantotem).

பழங்குடி மக்கள் தங்களை ஒரு குடும்பத்தவர் என்று கூறமுற்பட்டனர். ஒரு விலங்கையாவது அல்லது தாவர இனத்தையாவது தங்கள் குடும்பத்தின் அடையாளச் சின்னமாக்கிக் (Symbol or emblem) கொண்டார். சின்னமாகத் தேர்ந்தெடுத்த விலங்கின் மண்டையோடு அல்லது தோலைத்

தங்களின் குடும்ப அடையாளமாக அணியும் பழக்கத்தையும் மேற்கொண்டிருந்தனர். தங்கள் வீட்டின் நுழைவாயில் பகுதியில் அச்சின்னத்தை இடம்பெறச் செய்தனர். இச்சின்னம் குலமரபுச் சின்னம் (Totem) என்று அழைக்கப்படுவதாயிற்று. குலமரபுச் சின்ன முறைமையில் சுட்டப்படும். 'குடும்பம்' விரிந்த ஆழமான பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இக் குலமரபுச் சின்னத்தின் வழி உருவாக்கப்பட்ட குடும்ப அமைப்பு நிலைபெற; சில விதிமுறைகளும் அவைகளைச் சார்ந்து விலக்குகளும் (Taboos) எழுந்தன. சிக்மண்ட் ஃபிராய்டு (Sigmund Freud) என்பவர் குலமரபுச்சின்னமும் விலக்கும் (Totem and Taboo) என்ற ஆண்வுத் தலைப்பில் விரிவாக (நான்கு தொகுதிகளில்) நூல் எழுதியுள்ளார். 1913-இல் இந்நூல் வெளியிடப்பட்டது. தொடக்கத்தில் ஜெர்மன் மொழியி லிருந்த இந்நூல் 1965-இல் ஆங்கில மொழியாக்கம் பெற்றது. மானிடவியல் கல்வியியல் உளவியல் பகுப்பாய்வைச் செயல் முறைப்படுத்தி வெளிவந்துள்ள நூலாகும்.

ஒரே குலமரபுச் சின்னம் அல்லது குடும்பத்தாரிடையே திருமண உறவு கூடாதென்பது புறமணக்கொள்கை (Exogamy) எனப்படும்.

இவ்வாறு தங்களுக்கென குலமரபுச் சின்னத்தை வகுத்துக் கொண்டதால் இனக்குழு மக்களிடையே போர் எழுந்த நேரத்தில் தங்கள் குழுவை இனங்கண்டு கொள்ள வாய்ப்பாக இருந்தது. இடம்பெயர்ந்து செல்லுகையில் (Migration) ஒன்று கூடுமிடங்களில் தங்கள் குழுவினர் அல்லது குடும்பத்தினர் என அறிந்து கொள்ளவும் குலமரபுச்சின்னம் உதவியாக அமைந்தது.

ஒரே குலமரபுச் சின்னத்தை உடையவர்கள் ஒரு குடி யிருப்பில் கூடி வாழத் தலைப்பட்டனர். அவர்கள் குடியிருப்பின் நுழைவாயிலில் தங்கள் குலமரபுச் சின்னத்தைப் பெரிதாக வைத்துக் கொண்டனர். இவர்கள் இன்னொரு குலமரபுச்சின்னம் உடையவர்களிடமிருந்து பெண் எடுத்துக் கொண்டார்கள். இந் நிலையில் ஒரு குலமரபுச் சின்னமுடையவர்கள் வாழ்ந்த இடத்தில் பல குலமரபுச் சின்னம் உடையவர்கள் வாழவேண்டிய நிலை உருவாயிற்று. அடுத்துவரும் சந்ததியினருக்கு குலமரபுச்சின்னம் என்னவென்பது சிக்கலாக அமைந்தது. ஏற்கனவேயிருந்த

குலமரபுச்சின்னம் முதன்மைச் சின்னமாகவும் (Major totem) புகுந்த குலமரபுச்சின்னம் துணைநிலைச் சின்னமாகவும் (Minor totem or phratry) மானிடவியலார்கள் குறிப்பிட்டார்கள். முதன்மைச் சின்னம் தந்தை வழியிலும் துணைச் சின்னம் தாயின் வழியிலும் பின்பற்றப்பட்டது. தந்தைவழியில் புறமண உறவினைக் கடைபிடித்தல், தாயின்வழியில் புறமண உறவினைக் கடைப்பிடித்தல் என இரு வழக்கங்கள் உருவாக ஆரம்பித்தன. ஒன்றின் வளர்ச்சியும் தேய்வும் பயன்பாட்டுச் சூழ்நிலையைப் பொறுத்து அமைவதாயிற்று, இக்கருத்து மேலும் ஆய்விற்கும் சிந்தனைக்குமுரியது.

குலமரபுச் சின்னத்தின் பொதுப்பண்புகள் :

விலங்கு அல்லது தாவரப்பொருள்கள் சின்னங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. மனிதனில் அதீத சக்தியுடையவர் களையும் குலமரபுச் சின்னங்களாகக் கொள்ளும் பழக்கமும் தோன்றியது. இந்நிலையில் மூதாதையர் வழிபாடு (Ancestor worship) குலமரபுச் சின்னத்துடன் தொடர்பு கொள்ளும் நிலை ஏற்பட்டது எனலாம்.

சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் புனிதமாகவோ அல்லது மரியாதைக்குரியவைகளாகவோ கருதப் பட்டன என்று பொதுநிலையில் மதிப்பிட இயலாது. சில சின்னங்கள் பயம்பற்றிய எண்ணமாகவும் இருக்கலாம் என்று உளவியலார் குறிப்பிடுவர்.

குலமரபுச்சின்னத்தில் இடம்பெறும் நம்பிக்கைகள், சடங்கு முறைகள் மூதாதையர் வழிபாட்டுடன் உள்ளத் தொடர்பு, ஆவிபற்றிய எண்ணம் (animism) போன்ற கூறுகள் (religious elements) சமயத்தில் இணைத்துச் சிந்தித்துப் பார்க்கத் தக்கவை.

வேட்டை சார்ந்த பழங்குடிகளிடமும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்களிடமும் இப்பழக்கம் இன்றளவும் இருக்கிறது.

சின்னங்களைத் தங்கள் குழுவுடன் தொடர்புபடுத்திப் பல புராணக்கதைகளும் உருவாயின. இவ்வகைக் கதை புனிதமாகக் கருதும் இயல்பும் ஏற்பட்டது. எனினும் காரணகாரிய இயல்புகளை இவ்வகைக் கதையில் எதிர்பார்க்க வாய்ப்பில்லை. குறியீட்டுப் பொருள் கதைகளின் வழித் தெரிவிக்கப்படுகிறதா என்பது குறித்து ஆராய்தல் வேண்டும். களஆய்வுச் செய்திகள்

இவ்வகை முற்கோளுக்கு உதவலாம். கதைகளில் விலங்கு மூதாதையர்கள் சுட்டப்படலாம். மனிதனும் விலங்கும் இணைந்த நிலையில் மூதாதையர்களைக் குறிப்பிடப்படலாம்.

குலமரபுச் சின்னம்—கோட்பாட்டு வரலாறு (Totemistic theory)

இனக்குழு ஆய்வாளர் (Ethnoligist) ஜான் பெர்க்சன் லெனன் (Johnferguson Lennan) என்பவர் இக்கோட்பாட்டின் சிந்தனை வளர்ச்சிக்கு உதவியவர் ஆவார். ‘விலங்கு மற்றும் தாவரங்கள் வழிபாடு’ (The worship of animals and plants) என்ற இவரது நூல் 1870-இல் வெளிவந்தது. பொதுவாக மனித இனவளர்ச்சி இவ்வகைக் குலமரபுச்சின்ன முறைமையைக் (Totemistic Stage) கடந்துதான் வளர்ந்திருக்க முடியும் என்ற கருத்துடையவர்.

இ. பி. டெய்லர் (E. B. Tylor) என்பவர் ஆங்கிலேய நாட்டு மானிடவியலறிஞர் ஆவார். முற்சுட்டிய கோட்பாட்டின் சிலக் கருத்துக்களை மறுக்கிறார். குலமரபுச் சின்ன முறைமையில் விலங்கு வழிபாட்டையும் தாவர வழிபாட்டையும் இணைத்துப் பார்ப்பது தெளிவற்ற ஆய்வுப்போக்கு என்று குறிப்பிடுகிறார். மனிதனுக்கும் குறியீட்டுச் சின்னமாகவுள்ள விலங்கு மற்றும் தாவரப் பொருள்களுக்குமுள்ள உறவு நிலையில் (Animal and clan) வழிபாடு இடம்பெறவில்லை என்பார்.

ஸ்காட்டிஷ் அறிஞர் ஆண்டர்வ் லாங்க் (Andrlewlang) இருபதுகளின் தொடக்கத்தில் இருந்தவர். குலமரபுச் சின்னங்களின் வகைப்பாடுகளையும் உட்பிரிவுகளையும் குறித்து ஆய்வு நடத்தியவர். ஒரு குடும்பத்தாரால் குலமரபுச் சின்னம் மறக்கப் படாமல் இருக்க வேண்டுமென்பதற்காகப் புனிதம் வாய்ந்த புராணக் கதைகள் தோற்றம் பெறலாயின எனக் குறிப்பிடுவார்.

குலமரபுச் சின்னமும் புறமணமும் (Totem and exogomy) என்ற, தலைப்பில் ஜேம்ஸ் ஜார்ஜ் ஃபிரேசர் (Sir James George Frazer) 1910 - இல் அரிய நூல்களை வெளிக்கொணர்ந்தார். உலகில் பல பகுதிகளிலும் வாழும் பழங்குடிகளையும் அவர்தம் குலமரபுச்சின்னம், சமயம் போன்றவைகளைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

அலெக்சாண்டர் கோல்டன்வீசர் (Alexander Goldenweiser) இக்கோட்பாடு குறித்து ஆராய்ந்துள்ளார். ஜெர்மன் நாட்டு இனமரபு ஆய்வாளரான ரிச்சர்டு தர்ணவால்டு (1910) குலமரபுச் சின்ன முறைமையில் இடம் பெறும் சமுதாய விலக்குகள் (Taboos) குறித்து ஆராய்ந்துள்ளார். சில ஒழுங்கு முறைகள், பெரியோர்களிடம் மரியாதை காட்டுதல் போன்ற வழக்கங்கள் உருவாவதை எடுத்துக் காட்டுகிறார். முன்னோர் வழிபாடு (ancestor worship) ஆவியுலகக் கோட்பாடு (animism) பலியிடுதல் போன்றவைகளோடு குலமரபுச் சின்னத்தைத் தொடர்பு ஏற்படுத்த வாய்ப்பில்லை. தனித்த நிலையில் சிந்திக்கப்படல் வேண்டும் ஏன்பார் (1917 — 1918).

பிரெஞ்சு நாட்டினைச் சார்ந்த எமிலி டர்கிம் (Emile Durkheim) என்ற ஆய்வாளர் சமூகவியலில் ஈடுபாடுள்ளவர். குலமரபுச் சின்னத்தைச் சமூகவியல் பார்வையிலும் (Sociological point of view) மெய்ம்மையியல் பார்வையிலும் (Theological point of view) ஆராய வேண்டுமென்பார். சமயத்தின் தோற்றம் இக்குலச்சின்ன முறைமை என்பார்.

வியன்னா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பிரிட்ஸ் கிரேப்னர் (Fritz Graebner) இனமரபு ஆய்வாளர் ஆவார். இயற்கைப் பொருள்களுடன் மனிதக்குழு தொடர்பு (fetishim) கொண்டுள்ள நிலையினையும் அதன் இயல்பினையும் சமயவளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி விளக்குவார்.

இவ்வாறு வெவ்வேறு துறையைச் சார்ந்தவர்கள் இக்குல் மரபுச் சின்னம் குறித்துச் சிந்தித்தும் கோட்பாடுகளை உருவாக்கிக் கொடுத்தும் வந்திருக்கின்றனர்.

எடுத்துக்காட்டு விளக்கங்கள்

குலமரபுச் சின்னத்தைக் குறியீட்டுப் பொருளாக அமைத்துக் கொள்ளும் நிலை பழங்காலத்தில் இடம் பெற்றிருக்கிறது. இனக்குழு மக்கள் வளர்ச்சிபெற்று அரசுகள் அமைத்த காலத்திலும் குறியீட்டுச் சின்னத்தின் பயன்பாடு இருந்திருக்கிறது. பழங்குடி மக்களிடம் இடம்பெற்றிருக்கும் இவ்வியல்பு தற்கால மக்களிடம் எச்சப்பண்பாட்டு நிலையிலும் காணலாம்.

'கோத்திரம்' என்று குறிப்பிடும் முறைக்கும் குலமரபுச் சின்னத்திற்கும் தொடர்பு உண்டு. அசேலமுனி யானையிலிருந்தும் கேசபிங்களமுனி கோட்டானிலிருந்தும் அகத்தியமுனி அகத்திமலரிலிருந்தும் கௌசிகமுனி தர்ப்பைப் புல்லிலிருந்தும் கபிலமுனிவர் குரங்கினின்றும் உதித்தனரென்றும் கூறுகின்றனர். இத்தகு குலச்சின்னம் பெற்றவர்கள் குலச்சின்னமாகவுள்ள விலங்குகளிடத்தோ அல்லது தாவரத்தினிடத்திலோ பக்தி செலுத்த வேண்டும். அவ்விலங்குகளைக் கொல்லவோ அல்லது புசிக்கவோகூடாது. புறமணத்தின்போது சின்னம் கோத்திரமாகக் கருதப்படுகிறது. சில கோத்திரப் பெயர்கள் ரிஷிகளின் பெயரைப் பெற்றும் அமைவதுண்டு. பிராமண வகுப்பைச் சார்ந்தவர்களிடம் இம்முறை இடம்பெறுகிறது. இந்த முறைமையைத் தனித்தொரு நிலையில் ஆராயவேண்டும்.

சோழர்கள் புலியினையும், பாண்டியர்கள் மீனையும் தங்கள் குலமரபுச்சின்னமாகக் கொண்டிருந்தனர். இவை குலமரபிலிருந்து கொடி மரபிற்கு மாறிய வளர்ச்சிநிலை நன்கு சிந்திக்கப் படவேண்டிய இடைவெளியாகும். முத்திரை மோதிரத்தில் சின்னம் இடம்பெறுவதையும் அவ்வக்கால நாணயங்களில் இடம் பெறுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. சின்னங்களும் அவற்றின் பயன்பாடும் மாறி மாறியமைவதைக் காண முடிகிறது.

அக்கால அரசர்கள் வழக்கத்தில் காவல் மரம் இடம் பெற்றிருந்தது. இக் காவல் மரத்தினையே பழந்தமிழ் இலக்கியத்தில் தடிமரம் எனச்சுட்டும் போக்கும் காணப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் கடம்பரின் காவல் மரத்தை வீழ்த்திய செய்தியினை இங்கு இணைத்துப் பார்க்கலாம்.

> "வயவர் வீழ வாளரில் மயக்கி
> இடங்கவர் கடும்பின் அரசுதலைபனிப்பக்
> கடம்புமுதல் தடிந்த கடுஞ்சினவேந்தே.
>
> (பதிற். 12 : 1-3)

பகைவரின் அடையாளப் பொருள்களுக்குத் (Totem) தீங்கு விளைவிப்பதன் வாயிலாகப் பகைவருக்குத் தீங்கு விளைவிப்பதாகக் கருதியநிலை உள்ளீடாக இருக்கக் காணலாம். காவல் மரத்தின் அனைத்துப் பகுதிகளும் புனிதமாக நினைக்கும் போக்கும் இருந்திருக்க வேண்டும். நன்னன் மாமரக்கினைக் காவல் மரமாகக் கொண்டிருந்த செய்தியினைக் குறுந்

தொகை பாடல் (252 : 1 - 4) தெரிவிக்கின்றது. அம்மரத்தின் காயினை நீராடச் சென்ற பெண் எடுத்துத் தின்றதற்காகக் கொலைத்தண்டனை விதிக்கப் பெற்றாள் காவல் மரத்தின் பகுதிகளைப் பயன்படுத்தக் கூடாது என்று விலக்கு (Toboo) இங்கு மீறப்பட்டதாகக் கொள்ளலாம்.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களில், பழங்கதைகளில் குலமரபுச் சின்ன முறைமை குறித்துப் பல செய்திகள் கிடைக்கலாம். எடுத்துக்காட்டு விளக்கமாக ஒரு கதையை இங்குக் குறிப்பிடலாம். காளிகதை என்ற அம்மன்பாட்டு நாட்டுப்புற மக்களிடம் செல்வாக்குப்பெற்று விளங்கும் கதையாகும். இக்கதை, கதைப்பாடல் வடிவிலும், கூத்துக் கதையிலும் விரிவாக இடம் பெறுகிறது. காளியானவள் எருமைத் தலைகொண்ட மகிடாசுரனை வதம்செய்து கொன்றாள் என்பது கதை. எருமையைக் குலமரபுச் சின்னமாகக் கொண்ட இனக்குழு மக்களின் தலைவன் மகிடாசுரன் எனக்கருத இடமுண்டு. இக்கதையில் காளி, நாகத்தைக் குலமரபுச் சின்னமாகவுள்ள நாகர் இனத்தவரிடையே தோன்றுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற செய்திகளைக் குலமரபுச் சின்னத்துடன் இணைத்து மேலும் ஆய்வு நிகழ்த்த வாய்ப்புண்டு.

பழங்குடி மக்களிடம் இம்முறை இன்றளவும் வழக்கத்தில் இடம்பெற்று வருகிறது. இதனைக் களஆய்வின்வழி உறுதிப் படுத்த வாய்ப்புண்டு. தண்டப்புலையர் என்ற இனத்தவர் தென்மலையாளத்தில் வாழும் புலையரில் ஒரு பிரிவினர். இவர்கள் தண்டக்கொடியினை அறுத்து, அவைகளின் மூலம் செய்த ஆடையினையே அணிவர். தெலுங்கு, கன்னட நாடுகளிலிருந்து வந்த சக்கிலியர் ஆவரஞ்செடியை மிகப்புனிதமாகக் கருதி வருகின்றனர். விசாகப்பட்டினத்தருகில் மலைப்பகுதிகளில் வாழும் குர்னியர், தொரியர் எனப்படுவோர், பாம்புகள் உறையும் எறும்புப்புற்றினை வணங்குவர். பாம்பின் தலை போன்ற அணிகலன்களை அணிவதும் இவர்களிடையே வழக்கமாக உள்ளது. கோயம்புத்தூர் பகுதிகளிலுள்ள காட்டுக் குடியிருப்புகளில் இருளர்கள் எனும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களிடம் 'கரட்டிக' என்னும் குலம் காணப் படுகிறது. இக்குலத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் முன்னோர்கள் கரடியிலிருந்து வந்ததாக நம்புகின்றனர். கரடி இவர்களின் குல மரபுச் சின்னமாக இருந்திருக்கலாம். இவ்வாறு பழங்குடி

மக்களிடம் குலச்சின்னமுறைமை வழக்கில் இடம்பெற்று வருகிறது.

முடிவுரை :

இனக்குழு மக்கள் உயர்ந்த சமூக வளர்ச்சியினைப் பெறுவதற்கு 'இக்குல மரபுச்சின்ன முறைமை' பல வழிகளில் உதவியிருக்கிறது. சமயத்தின் தோற்றம், புறமணக்கொள்கை போன்றவற்றில் ஆய்வு செய்பவர்களுக்குக் குலமரபுச்சின்னம் பற்றிய கோட்பாடுகள் உதவும் என மதிப்பிடலாம். இலக்கியத் தரவுகளின் வழி பழங்காலத்திலிருந்து குலமரபுச்சின்னம் பற்றிய எண்ணங்களை அறிந்து கொள்ளலாம். நாட்டுப் புற மக்களிடம் எச்சநிலையிலுள்ள இப்பழக்கம் பழங்குடியினரிடையே வழக்கில் இடம் பெற்றிருப்பதை ஆய்வின்வழி உணர முடிகிறது.

பார்வை நூல்கள் :

தமிழ் :

1. கந்தையா பிள்ளை, பி. இ., **தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்** ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1958.
2. காந்தி, க. **தமிழர்பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்** உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1980.
3. செங்கோ, **வனாந்தரப்பூக்கள்**, நியுசெஞ்சுரி புக் கவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1979.
4. பாலசுப்பிரமணியன், இரா. **கணியான்கூத்து** சத்யா வெளியீடு,பாளையங்கோட்டை, 1986.

ஆங்கிலம் :

5. Max Muller, F , *Anthropological Religion,* Asian Educationol Services, New Delhi, 1986.
6. Sigmund Freud, *The orgins of Reiigion Penguin* Book Ltd., Harmonds Worth, Middle Sex.

கலைக்களஞ்சியம் :

தமிழ் :

... ...' **தமிழ்க்கலைக் களஞ்சியம்** (தொகுதி-4) தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னை, 1956.

ஆங்கிலம் :

— — — — — *Encvclopeida of Britannica* William Bentam Publishers, The University of Chicago, 1972.

பழந்தமிழிலக்கியத்தில் சட்டமும் நீதிமன்றமும்

காவேரி ஆவுடையப்பன், எம். ஏ., எம். ஃபில்,
4, ஆய்வாளர் குடியிருப்பு,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-625 021.

முன்னுரை :

வாழ்வாங்கு வாழ நினைக்கும் ஒவ்வொரு தனிமனிதனும் தனக்குரிய வாழ்க்கை நெறிமுறைகளைத் தனக்குத்தானே வரையறுத்துக் கொள்கிறான். இம்மனிதன் சமுதாயத்தோடு இணைந்து அதன் அங்கமாக மாறும்போது அவன் வகுத்துக் கொண்ட வாழ்க்கை நெறிமுறைகளே சட்டங்களாக மாறுகின்றன. இதன் மூலம் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே சட்டநெறி முறைகள் நடைமுறையில் இருந்திருக்கின்றன என்பதை உய்த்துணரமுடியும்.

இன்று இருக்கும் நீதிமன்றங்களுக்கு நிகரான நீதிமன்றங்களோ இப்போது நடைமுறையில் இருக்கும் நீதி நிருவாகம் போன்ற நீதிநிருவாகமோ தற்போது புழக்கத்தில் இருக்கின்றவற்றையொத்த சட்டத்தொகுப்புக்களோ பழங்காலத் தமிழரிடம் இருந்திருக்காவிட்டாலும் அந்தக்காலச் சமுதாயத்திற்கேற்ற நீதிமன்றங்களும் நீதிநிருவாக முறையும் அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

சட்டம் என்கிற சொல், பழங்காலத்தில் அச்சொல்லுக்குப் பதிலியாக வழங்கிய சொற்கள், அக்காலத்தில் இருந்து நீதிமன்ற அமைப்புக்கள் ஆகியன பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

1. 1. சட்டம் :

சட்டம் (Law) என்கிற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் ஆளப்படாத சொல்லாகும். இலக்கிய ஆளுமை அருகிய, வழக்குச் சொல்லாகவே சட்டம் என்னும் சொல் திகழுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் இச்சொல் உணர்த்தும் முழுப் பொருண்மையோடு - இச்சொல்லுக்கு இணையாக அறம், நீதி என்ற சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

சென்ற இதழ் தொடர்ச்சி

தாய் நாற்பது

இராமசாமி கோனார்

34. குறுகுறு என்றெழில் கொஞ்ச நடந்து
சிறுகுறும்பு செய்யுந்தன் சேய்தான் — சிறுகை
அளாவிய கூழே அமுதென்பாள் அன்னை
வளாகமே தாய்போற்றி வாழ்.

35. ஆகும் நெறியெவை ஆகா நெறியெவையென்
றேகும் நெறிக்கே இனியசெய் — யோகியரும்
தாய்போற்றி வாழ்ந்திடுவார் தங்கட் கிணையாகார்
ஆய்போற்றல் நன்னெறியே ஆம்.

36. காலத்தில் ஒன்றுங் கருதா துணைக்காத்தாள்
ஞாலத்தின் மேலாவாள் நன்கறிவீர் — ஞாலத்தீர்
அன்னையைப் போற்றார் அருந்தவத்தோ ராயினுமென் ?
என்னா மவர்தவமென் றேசு.

37. விலங்கொடு மக்கள் அனையரே யீன்றாள்
நலங்காண் தன் மைந்தரொடு நல்லாய் ! — நலங்காணா
மற்றையோர், மற்றுமவர் மாசறக் கற்பவை
கற்றாலும் மாக்களே காண்.

38. உன்னுயிரின் மேலாம் உயர்வுசால் தாய் மொழியை
முன்னம் அளித்த முதல் தெய்வம் — என்னவெனில்
அன்னையே என்றிவ் வவனியெல்லாங் கூறுமே
அன்னையே ஒப்பவர் ஆர்.

39. அன்னையை ஒப்பவர் ஆருண்டு வையகத்தே
அன்னை தனக்குநிகர் அன்னையே—நின்னுயிரைத்
தன்னுயிராய்க் கொண்டு தவங்கிடந்த தாயுள்ளம்
பின்னமுறச் செய்யாதே பின்.

40. துயிலுமுன் தாயைத் தொழுது துயில்க
துயிலெழுங் காலுந் தொழுக—செயிர் தீர்ந்த
முந்தையோர் கண்ட முறையிதனைக் கைக்கொண்டால்
நைந்திடும் பேரிடர் நம்பு.

முற்றும்.

உரை

செய்யுள் — 34

குறுகுறு என்று, எழில் கொஞ்ச நடந்து — தள்ளாடித் தள்ளாடித் தளர் நடையிட்டு, உறுப்பழகு அணைத்தும் சேர்ந்து பொலிய நடந்து வந்து, சிறுகுறும்பு செய்யும் தன் சேய் தான் பெற்றோர்க்கு மகிழ்ச்சியூட்டும், சிறு துடுக்குச் செயல் செய்யும் தன் குழந்தை, சிறுகை அளாவிய கூழே — புழுதி படிந்த தன் சிறுகையால் துழாவிய கூழ் உணவு, அமுது என்பாள் அன்னை — அமுதம் எனக் கொண்டு உண்பவள் அன்னை, வளாகமே தாய் போற்றி வாழ் — உலக மக்களே, அத்தகைய சிறப்பு வாய்ந்த தாயைப் போற்றி வாழ்வீர்களாக.

எழில் — உறுப்பழகு

சிறுகையால் அளவலாவது " இட்டும், தொட்டும், கௌவியுந்துழந்தும் — நெய்யுடையடிசில் மெய்பட விதிர்த்தல் " — ஆகும்.

" அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்" — என்பர் தெய்வத் திருவள்ளுவர்.

செய்யுள் — 35

ஆகும் நெறி எவை, ஆகா நெறி எவை என்று — மறுமைப் பயனை எய்துதற்குத்தக்க நெறிகள் எவை, தகாத நெறிகள் யாவை என்று சிந்தனை செய்து, ஏகும் நெறிக்கே இனிய செய் யோகியரும் – செல்ல இருக்கும் உயர்கதியின் பொருட்டு, பிறவுயிர்க்கும் இன்பம் பயக்கும் நற்செயல் செய்யும் யோகிகளும், தாய் போற்றி வாழ்ந்திடுவார் தங்கட்கு இணையாகார் — பெற்ற தாயைப் போற்றி, வாழ்வாங்கு வாழும் நல்லோர்கட்கு ஒப்பாகார், காய் ஆமோ ஈடுகனி — இயல்பாகக் கொம்பிலேயே கனிந்த கனிக்குக் காய் ஈடாகுமோ ? ஆகா.

யோக நெறிக்கண் செல்வார் யோகி எனப்படுவார். அஃது இயமம், நியமம், இருப்பு, உயர்நிலை, மனவொருக்கம், தாரணை தியானம், சமாதி என எண் வகைப்படும்.

முன்னறி தெய்வமாம் அன்னையைப் போற்றுவார், பரம்பொருளைப் போற்றும் பெற்றியுடையராய் பேரின்ப வாழ்வு எளிதில் பெறுவராதலின், அன்னையைப் போற்றாது தன்னை

யும் வருத்திப் பேரின்ப வாழ்வு கருதி அரிய யோக நிலையைக் கைக்கொள்ளும் யோகியரினும் சிறந்தார் எனக் கொள்க.

கொம்பின்கண் இயல்பாகவே கனிந்தது கனி எனப்படும்.

செய்யுள் — 36

ஞாலத்தீர் — இறைவன் பேராற்றலுக்கு இலக்காகிச் சுழன்று கொண்டிருக்கும் உலகிடை வாழும் மக்களே,

காலத்தில் ஒன்றும் கருதாது — நுங்கள் இளமைப்பருவத்தில் ஓர் பயனையும் எதிர்நோக்காது, உமைக்காத்தாள் நுங்களைப் பாதுகாத்தவளாகிய தாய், ஞாலத்தின் மேலாவாள் நன்கு அறிவீர் — நல் வாழ்விற்கு இருப்பிடமாய இந் நிலவுலகத்தினும் சிறந்தவளாவாள் என்பதை உணர்வீர்களாக, அன்னையைப் போற்றார் அருந்தவத்தோர் ஆயினும் என் ? — பெற்றவளைப் போற்றாதார் செய்தற்கரிய தவத்தை மேற்கொண்டவராக இருப்பினும் என்ன பயன் ; அவர் தவம் என் ஆம் என்று ஏசு — அத்தகையோர் தவம் அவர்க்கு என்ன பயனை அளிக்கும் என இகழ்ந்து விலக்குவீர்களாக.

ஞாலுதல் — தொங்குதல், அசைதல்

செய்யுள் - 37

நல்லாய் நற்குணங்கள் சான்ற நங்கையே, விலங்கொடு மக்கள் அனையரே—விலங்கொடு ஒப்புநோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத் தீமையுடையர், ஈன்றாள் நலங்காண் நன்மைந்தரொடு நலங்காண் நன் மைந்தரொடு நலங்காணா மற்றையோர் — பெற்றவள் நன்மையில் நாட்டங்கொள்ளும் நல்ல மைந்தரொடு ஒப்பு நோக்க பெற்றவள் நன்மையில் நாட்டங் கொள்ளாத பிறர், மற்றும் அவர் மாசு அறக்கற்பவை கற்றாலும் — மேலும், பெற்றவள் நன்மையில் நாட்டங் கொள்ளாதவர் ஐயந்திரிபறக் கற்க வேண்டிய நூல்கள் பலவுங் கற்றிருந்தாலும், மாக்களே காண் — பகுத்தறிவற்ற ஐயறிவுடையவரே என அறிக.

கண்கண்ட தெய்வமாம் நற்றாயைப் போற்றும் பெற்றி நோக்கி, நன்மைந்தர் எனப் போற்றப்பட்டார். மாசு—ஐயமும் திரிபுமாம். நற்றாயைப் போற்றாதார், அறம் முதலிய உறுதிப் பொருளுணர்த்தும் நூல்கள் பல கற்றாலும், பயனில்லை என உணர்க. மாக்கள் — ஐயறிவுடையோர் "மாவும் மாக்களும் ஐயறிவுயிரே"— என்பர் தொல்காப்பியர்.

செய்யுள் — 38

உன் உயிரின் மேலாம் — உடலிற் சிறந்ததாகக் கருதப்படும் நின் உயிரினும் மேம்பாடுடைய, உயர்வுசால் தாய்மொழியை

எம் மொழிக்கும் வாய்க்கப் பெறாத பல சிறப்பு சான்ற தாய் மொழியை, முன்னம் அளித்த முதல் தெய்வம் — முதன் முதலில் பாலொடு கலந்தூட்டிய முதல் தெய்வம், என்னவெனில் — எது என வினாவினால், அன்னையே என்று இவ் அவனியெலாம் கூறுமே — பெற்ற அன்னையே முதல் தெய்வம் என இவ்வுலகமக்கள் அனைவரும் விடை இறுப்பர், அன்னையே ஒப்பவர் யார்? அச்சிறப்பு வாய்ந்த அன்னையை ஒப்பவர் யாருளர்? எவரும் இலை.

செய்யுள் — 39

அன்னையை ஒப்பவர் ஆருண்டு வையகத்தே — பெற்ற தாய்க்கு ஒப்பாகத் தக்கவர் இந்நிலவுலகத்தே யார் உளர், அன்னை தனக்கு நிகர் அன்னையே — பெற்ற தாய்க்கு ஒப்பு அவளே, நின் உயிரைத்தன் ?உயிராக்கொண்டு—உன் உயிரைத் தன் உயிராகப் பாவித்து, தவம் கிடந்த தாய் உள்ளம் — நின் நல்வாழ்விற்காகத் தவமிருந்த தாய் மனம், பின் பின்னம் உறச் செய்யாதே — பிற்காலத்தே மாறுபாடு கொள்ளத்தக்க தீச்செயலைச் செய்யாதே

வை + அகம் வையகம்,

வைக்கப்பட்ட இடம், ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக உள்ள உயிர்ப்பொருள்களின் நலன் கருதி, பூமியின் புறத்தும், அகத்தும் வேண்டிய மூலப்பொருள்கள் அனைத்தும் பரம் பொருளால் வைக்கப்பட்டமையின் வையகம் என்னும் பெயர்த்து '' யார் - என்பது " ஆர் '' என வந்தது.

செய்யுள்—40

துயிலும் முன் தாயைத் தொழுது துயில்க - இராப்பொழுது உறக்கங்கொள்ளுமுன் தாயைத் தொழுது, பின் படுக்கையில் கிடந்து உறங்குக, துயில் எழுங்காலும் தொழுக மீண்டும் படுக்கையில் இருந்து எழும்பொழுதும் தாயைத் தொழுது எழுக, செயிர் தீர்ந்த முந்தையோர் கண்ட—குற்றமற்ற நம் முன்னோர்கள் தூய அறிவால் கண்டுணர்ந்த. முறை இதனைக் கைக் கொண்டால் — இச்சீரிய முறையைக் கைக்கெண்டுவரின், நைந்திடும் பேர் இடர்நம்பு - மிகப்பெரிய பிறவித் துன்பமும் ஒழிந்துவிடும், இதை நம்புவீர்களாக. பேர் - இடர் — பிறவித் துன்பம்.

"தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்டமுறை" — என்பர் பிறரும்.

முற்றும்

சி. வை. தாமோதரம்பிள்ளை வாழ்வும் வாக்கும்

டாக்டர் ம. இராசேந்திரன்
விரிவுரையாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

முன்னுரை :

'தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்'

என்ற பரிதிமாற் கலைஞரின் அறைகூவலில் உண்மை இருக்கத்தான் செய்கிறது ; எனினும் எவர்தாமோ தரமுடையார் ? என்று ஒதுங்கி நிற்றலும் சி. வை. தா. வை ஒதுக்கி நிறுத்தலும் நியாயமில்லை தானே ? தமிழகத்தைப் பொருத்தமட்டிலும் சி. வை. தா. விற்கு உரிய சிறப்பிடம் இதுவரை வழங்கப் படவில்லை என்பது ஈழத் தமிழறிஞர்களின் கருத்தாகும். இக்கட்டுரை சி. வை. தா. வின் வாழ்வும் வாக்கும் பற்றி ஆராய்கிறது.

சி. வை. தாமோதரம்பிள்ளை :

சென்ற நூற்றாண்டின் இறுதியிலே பெரும்புகழ் பெற்று விளங்கிய தமிழறிஞர்களின் வரிசையில் சி. வை. தா. வை முதலில் வைத்துப் பெருமை பாராட்டினார் வையாபுரிப்பிள்ளை.[1] தஞ்சாவூர் ஸ்ரீநிவாசபிள்ளையின் தமிழ் வரலாற்றிலும் சி. வை தா. சிறப்பிக்கப்படுகிறார்.[2]

ஈழத் தமிழ் இலக்கிய வரலாறு :

கடந்த நூற்றாண்டில் தமிழின் விதியை நிர்ணயித்தவர்களுள் ஒருவராக விளங்கிய சி. வை. தா. ஈழத்தைச் சேர்ந்தவர். ஈழத்து இலக்கிய வரலாறு தமிழகத்துத் தமிழிலக்கிய வரலாற்றிலும் சற்று வேறுபட்டதாகும். 'ஈழத்துப்பூதனார்' என்பவரை ஈழத்தவராகக் கொள்வதில் கருத்துவேறுபாடுகள் உள்ளன. அவற்றையெல்லாம் களைந்து ஐயமற நோக்கினால் ஈழத்தில் தமிழ் இலக்கிய மரபு கி. பி. 14ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே சிறந்திருந்தது எனலாம். அதற்கு அநுராதபுரத்திலுள்ள நாட்டார் கல்வெட்டுகள் நான்கும் சான்றுகளாகின்றன.[3] அதனால் ஈழத்துத் தமிழிலக்கியக் காலத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் (1250—1621) போர்த்துக்கேசியர்

காலம்(1621 – 1658) ஒல்லாந்தர் (Dutch) காலம் (1658 –1796 என்று 14 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை வகைப்படுத்துவர்.[4] அதன்பின்னர் இந்தியாவைப் போன்றே ஈழமும் ஆங்கிலேயரின் ஆளுகையில் இருந்தது.

வரலாற்றுப் பின்புலம் :

அவற்றுள் ஐரோப்பியரின் ஆட்சிக் காலமாகிய 17 ஆம் நூற்றாண்டு முதல் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க நாள் வரையிலான காலப்பகுதி இக்கட்டுரையினைத் தொடங்குவதற்கு முன் நினைவுகொள்ள வேண்டியிருக்கிறது.

ஐரோப்பியர்கள் தங்களது காலனியாட்சிக்கு உட்பட்ட நாடு களையும் மக்களையும் தமதுநிலையான ஆளுகைக்குஉட்படுத்தக் கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். அவற்றுள் குறிப்பிடத் தக்கது அப்பகுதி மக்களை மதமாற்றும் முயற்சியில் ஈடுபட்டமை யாகும். தொடக்கத்தில் கத்தோலிக்க மதப்பிரிவைச் சேர்ந்த போர்த்துக்கேசியர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஈழத்துத் தமிழ்ப் பகுதிகள் மீது பூரண ஆட்சி நடத்தத் தொடங்கிய கி. பி. 1621 முதலே இத்தகைய மதமாற்ற முயற்சிகளை மேற் கொள்ளலாயினர். 'குவேறோஸ்' எனும் போர்த்துகேசிய பாதிரியாராகிய வரலாற்றாசிரியர் யாழ்ப்பாணமும் போர்த்துகேசிய மன்னர் சொத்தானது. அங்குள்ள மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாவார்கள். 20,000 போர்த்துகேசிய ஆடவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றனர்[5] என்று குறிப்பிட்டுள்ளார்.

'யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியிலே திருஅவதாரஞ் செய்து சித்தாந்த சிகாமணி போன்ற நூல்களை எழுதிய நல்லூர் ஞானப்பிரகாச சாமிகள்' போர்த்துகேச அரசினர் காலத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டினர் போர்த்து கீசியருக்கு உணவிற்காக ஒரு பசுவை அனுப்பும் விதிப்படி தமது முறைக்குரிய நாளிற்கு முதல்நாள் இரவு யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டுத் தமிழகம் வந்தடைந்து திருவண்ணாமலை ஆதினத்தில் 'கஷாயம் பெற்றார்' என்பது போர்த்துகீசியர் நடந்து கொண்ட முறைக்கு ஒரு சான்றாகும்.

அங்குள்ள, 'சைவாலயங்களையெல்லாம் இடித்தும் சனங்கள் பலரை வலாற்காரமாகக் கிறிஸ்தவராக்கியும் சைவ

ராயுள்ளவர்களைத் தங்கள் சமயாசாரங்கள் அனுட்டியாதபடி தடுத்தும் தமது ஆசாரங்களை நாட்டியும் வந்தார்கள். அவர்கள் காலத்திலே சைவர்கள் ஒளிந்தும் மறைந்தும் தமது அனுட்டானங்களையும் ஆசாரங்களையும் பேணி வந்தனர். வாழையிலையிற் சாப்பிடுவதுதானும் சில காலத்தில் விலக்கப் பட்டதென்பர்'.[6]

அவர்களுக்குப்பின் வந்த டச்சுக்காரர்கள் புரட்டஸ்டண்டு கிறித்தவர்களாக இருந்தார்கள். அவர்களும் மதத்தைப் பரப்பு வதில் போர்த்துகேசியர்களைப் போலவே இருந்தனர். அதன் பின்னர் 1719 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டது. அப்போதும், 'சைவ சமயத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவருபவர் அரியராயினர். வித்துவான் களாயுள்ளவர்கள் கடினமான பாட்டுப்பாடுவதிலே தங்கள் காலத்தைக் கழித்தார்கள். சமயாபிமானம் அவர்களிடத்தில் மிகக் குறைவாக இருந்தது கிறித்தவ குருமார் இதுவே சமயமென்று நினைத்து அநேகரைக் கிறித்தவராக்கத் தொடங்கினார்கள். பள்ளிக்கூடங்களை வைத்துப் பிழைப்புக் கேற்ற இங்கிலீசுப்பாஷையை உத்தியோகம் வாங்கித்தருவோம் என்று சொல்லிப் படிப்பித்துப் பலரைக் கிறித்தவராக்கினார்கள். சிலரைச் சோறு, சீலை கொடுத்துக் கிறித்தவராக்கினார்கள். சிலரைக் கலியாணச் செலவு கொடுத்துக் கிறித்தவராக்கினார்கள். கீழ்ச்சாதியாயுள்ளவர்கள் சிலரை மேற்சாதியாரோடு சமமா யிருக்கச் செய்வோமென்று சொல்லிக் கிறித்தவராக்கினார்கள்'.[7]

இவ்வாறு கிறித்தவர்கள் தமது பல்வேறு வழிமுறைகளையும் கைக்கொண்டு இலங்கையின் மதமாற்றம் செய்து கொண்டிருந்த காலகட்டத்தில் அங்கிருந்த பூர்வீக மதங்களைச் சேர்ந்தவர்கள் விழித்துக் கொண்டனர். கொழும்பு நகரின் தெருக்களில் பௌத்தரும் கத்தோலிக்கரும் சண்டையிட்டுக் கொண்டனர்; கிறித்தவரும் பௌத்தரும் பொது மேடையில் விவாதங்கள் நடத்தினர். துண்டுப்பிரசுரம், பத்திரிகை, பௌத்தரைக் கதா நாயகராகவும் கிறித்தவரை வில்லனாகவும் கொண்ட இலக்கியங் கள் ஆகியவை வெளிவந்தன. Buddhist Theosophical Society பௌத்த பாடசாலைகள் தோன்றின. கிறித்தவர்களால் கிறித்தவ மதம் மட்டுமன்றிச் சாராயம், அபின், மாட்டிறைச்சி, சிகை அலங்காரம் ஆகியவையும் இலங்கையில் அறிமுகமாயின.[8]

இதேபோன்று தமிழர் வாழும் யாழ்ப்பாணப் பகுதியிலும் பிரச்சினைகள் எழுந்தன. ஆறுமுகநாவலர் அதனைத்

தொடங்கிவைத்தவராவார். அதன் பின்னே சுன்னாகம் முத்துக் குமாரசாமிப்பிள்ளை, சபாபதி நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, கதிரைவேற்பிள்ளை போன்றோர் அதனை வழி நடத்திச் சென்றனர்.

தமிழகத்தின் இத்தகைய சூழல் தோன்றவில்லை. இதற்கான காரணங்களைப் பின்வருமாறு அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் சைவசமயம் இருந்தது. ஆனால் மடங்கள் இல்லை. தமிழகத்தில் மடங்களும் இருந்தன. ஆனால் யாழ்ப்பாணத்துச் சைவர்கள் கிறித்தவ மதத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து நூல்கள் எழுதினமைபோன்று தமிழகத்து மடங்கள் யாண்டும் அத்தகைய முயற்சிகளை மேற் கொள்ளவில்லை. இதற்கு இரு நாடுகளிலும் நிலவிய சமூக அமைப்புகள் காரணமாகும். யாழ்ப்பாணத்தில் பார்ப்பனர் என்ற மேல்சாதியினர் சைவசமயத்தில் இல்லை. அதற்குப் பதிலாக சைவ வேளாளர்கள் இருந்தனர். அவர்கள் தமிழகத்துப் பார்ப்பனர்களுக்கு இணையானவர்கள்.[9] அங்கிருந்த சைவ சமயத்தினரின் மேல்சாதிக்காரர்கள் தமிழ்வழிப்பட்ட சமயத்தின ராக இருந்தனர். தமிழகத்தில் மேல்சாதிக்காரர்களாக இருந்த சைவசமயத்தினர் 'தமிழ்வழிப்பட்டவர்களாக இல்லாமல் வேதழிப் பட்டவர்களாக இருந்தனர். எனவே தமிழ்நாட்டில், கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும்போது ஆங்கிலேயர்கள் வடமொழியையும், வேதத்தையும் எதிர்ப்பதாகத்தான் தோன்றியதே தவிரத் தமிழை எதிர்ப்பதாகத் தோன்றவில்லை· ஆனால் யாழ்ப்பாணத் தில் தமிழை எதிர்ப்பதாக அமைந்தது. எனவே தமிழ் வழிப்பட்ட சைவசமயத்தினர் கிறித்தவமதத்திற்கு எதிராகக் கிளர்ந் தெழுந்தனர். அத்துடன் ஆங்கியேயருக்குமுன் தமிழகம் முழுவதும் கூட யாழ்ப்பாணம் போன்று ஐரோப்பியரின் ஆளுகைக்குள் வரவில்லை. வரலாற்றிலும் இதன் தொடர்ச்சி யைக் காண முடிகிறது.

ஐரோப்பியரின் காலனியாதிக்கத்தை எதிர்க்க வேண்டியவர் கள் கிறித்தவமத எதிர்ப்பாளாராக மட்டும் திசைதிருப்பி விடப் பட்ட இந்தக் காலத்தில்தான் சைவமும் தமிழும் அச்சு எனும் புதிய வளர்ச்சியைப் பெற்றது.

ஆங்கிலேயர்களில், ஆங்கிலத்தை மக்களுக்குக் கற்பித்து அதன்வழிக் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பிடவேண்டும் என்று வங்காளத்தில் Dr. Duff என்பவரும் சென்னை இராசதானியில் ஆண்டர்சன் (Anderson) போன்றோரும் கருதினர். (தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிலாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ.	40 00
சொல்லதிகாரம்	ரூ.	45 00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ.	7 50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி.

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ....
அவர்கள்

....

....

....

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌளி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜ வீதி.
தஞ்சாவூர் - 613 009.